KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-0

கலா நிலயம்.

V 7. No. 21. [illegible]. 1934

N311. N23 K11
30.7.21
199171

**KALANILAYAM** தனிப்பிரதி விலை அணு 0-2-6

# கலாநிலயம்

**A Literary Weekly**
வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ௵ மே ௴ 24௳ [No. 21

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 321
2. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 3 களம் 1.) Goldsmith's—"She stoops to Conquer" 323
3. அப்பர் (64. கலை-இதிகாசம்-இராமன் சரிதை) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L 324
4. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 7-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 326
5. தமிழ்ப் பாடம் வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 327
6. மதுரைக்கோவை (உடன்போக்கு,தாயர்புலம்பல்) S. வையாபுரிப்பிள்ளை, B.A. B.L. 329
7. ஸ்ரீதியாகராஜ கீர்த்தன மணிமாலை (கடதேராதா மனஸா) P. S. ஸ்ரீநிவாசாச்சாரியார் B.A. 331
8. கம்பராமாயணம்—(மராமரப் படலம்) T. N. சேஷாசலம் B.A.B.L. 332
9. வர்த்தமானம் 333

## கலாநிலயம்

### சுய கல்சர் 4.

மானுடர்க் கியற்கையா யமைந்துள்ள அம்சங்களில் தருமசிந்தனை தெய்வசிந்தனை என்னுமவ் விரண்டையும், இயற்கைச் சக்திகளாகிய சுயஆராய்ச்சி சுயவளர்ச்சி என்பவைகளைக்கொண்டு நெறிமுறையில் பெருக்கிக்கொள்ளும்முயற்சி சுயகல்சர் ஆமாறு இதுவரையில் கூறலாயினோம். மானுட இயற்கை அம்சங்களில் புத்தியென்பது ஒன்று. இனி, புத்திக்கும் சுயகல்சருக்கு முள்ள தொடர்பினையும் சிறிதுநாம் ஆராய்வோம்.

புத்தியென்னும் அந்த அம்சத்தை, அதுசெய்யும் தொழிலால் குறிக்கும்போது, பகுத்தறிவு என்கின்றோம். புத்தியென்பது, விஷயங்களின் தன்மையைப் பற்றி யோசிக்கின்றது, காரணகாரிய நிகழ்ச்சிகளையும் ஆய்கின்றது, முன்னொன்று நிகழ்ந்ததிலிருந்து பின் என்ன முடியுமென்று தீர்மானம் செய்கின்றது. தனக்குப் புலனான பொருள்களை அவைகளின் தன்மைக்கு ஏற்றவாறும் பயனுக்கு ஏற்றவாறும் வகைப்படுத்துகின்றது, தொகுக்கவும் தொகுக்கிறது, பலவிதமான தொகைக்கிடையே வேறுபாடுங் காண்கின்றது. இவ்விதத் தொழில்களெல்லாம் புரிகின்ற புத்தியென்னும் அம்சம் எல்லோரிடத்திலும் ஒவ்வோரளவு இருக்கின்றது. அளவிலும், பயிற்சியால் அது அடைந்துள கூர்மையிலும், ஒருவருக் கொருவர் சிறிதும் பெரிதுமாய ஏற்றந்தாழ்வு தோன்றலாமே யல்லாமல் புத்தி என்பது அறவே இல்லாத மாந்தர் இல்லை—தன்பால் புத்தி யிருக்கின்றதென்று தெரிந்துகொள்ளாத மனிதனும் இல்லை. உண்மையாக இருக்கும் அளவிற்குப் பலபடி அதிகமாகஇருப்பதாக மதித்துக்கொள்வதே கடனாகவும் காண்கின்றோம். மனிதன் தன்னுடைய ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு அவசியமானதோர் பெருங் கருவியாயிருப்பதால் புத்தி தன்னிடத்தில் இருக்கின்றது என்பதை அவன் மறப்பதில்லை. தான் தொடர்ந்த ஆசை நிறைவேறியதாயின் தன்னுயடை புத்தியை மிகவும் மதித்துப் பாராட்டிக்கொள்கின்றான். நிறைவேறாமல் தவறியதாயின் பிறர் கெடுத்தனரென வைவதும், விதியை நோவதும், கண்ணில்லை என்று கடவுளைப்பழிப்பதும் அவன் செய்கின்றானேயன்றித் தன் புத்தியின் குறைவால் நினைத்தகருமம் நிறைந்ததில்லை என்றொருவனும் பெரும்பாலும் எண்ணுவதரிது. சுயவாரய்ச்சிசெய்யாமல், புத்திக்கு எட்டிய சூழ்ச்சிகளில் ஆழ்ந்து உழல்வதன் முடிவு இன்னதாம். முதலில், தன்னுடைய சாமர்த்தியத்தையும் 'கெட்டிக்காரத்தனத்தையும்' நினைத்துநினைத்து மகிழ்வதும், தன்னைப்போன்றபுத்திசாலிகளைப் பெரிதுபாராட்டுபவனு மானபோதிலும், முறைப்படிபுத்திமுதிர்வடைந்துவருகின்ற வொருவன் சுயவாராய்ச்சியால், தான் சாதித்ததன் லாபத்தையும் சாதிக்கமுடியாமல் விட்டவைகளால் நேர்ந்த நட்டத்தையும் உள்ளவாறு சீந்தூக்கிப் பார்க்கும்பொழுது, வெளிப் பார்வைக்கு இலாபமும் நஷ்டமும்போல் தோன்றுவன பல உண்மையில் அத்தோற்றத்திற்கோ மாறான தன்மையையுடையனவாயிருக்கலாவது மெல்லமெல்லத் தெரிந்து கொள்பவனாவான். நூற்றெண்பது வருடங்களுக்கு முன் எழுதிய எட்வர்ட் யங் என்னும் ஆங்கிலக் கவி யொருவர் இவ்விடயங்களைக் குறிப்பவராய், "முப்பதாமாண்டில்ஒருவன் தான்மூடனேவென்று அயிர்க்

கத்தலைப்படுவான்—நாற்பதுவயது ஆகும்போது அது நிச்சயம்" என்றெடுத்துக் காட்டினார். கல்வி முதலிய சாதனங்களால் தன் சுயவாராய்ச்சிச்சக்தியைப் பலப்படுத்திக்கொண்டு அதனுதவியால் நம் கெட்டிக்காரச் செயல்கள் என்று எண்ணி இருந்தவைகளில் பலவற்றை நுணுகிநோக்குவானாயின் அவை பெரும்பாலுந் தன் 'முட்டாள்தனத்திற்கே' சாக்ஷிகளாய் நிற்கலாவதை உணராமற்போவது அருமை. "அறிதோ றறியாமை கண்டற்று" என்று வள்ளுவர் வகுத்த வாய்மையின் கருத்தும் இன்னதே.

ஒருவனைப் பார்த்து, "நீ முன்னுக்குவரவேண்டும், அதற்கு வேண்டியன செய்துகொள்" என்று உரைப்போமாயின்,சாதாரணமாக இவ்வாசகத்திற்குஅவன் காண்கின்ற பொருள் யாது? தான் தன்னுடைய புத்தியைச்செலுத்தி, யாதானும் ஒரு கருவியைத் திறமையுடன் பயிலும்வகை தேடிக்கொள்வதே முன்னுக்கு வரும் முயற்சியென்பது அவனது கொள்கையாகின்றது. நாவன்மையால் வழக்காடப்பயில்வதும்,மொழிவன்மையால் நூல்களெழுதப்புகுவதும், அநுபவச் சூழ்ச்சியால் வர்த்தகஞ் செய்வதும், மெய்ம்மிகவருந்தி உத்தியோகத்தில் உயர்வதும், இவையனைய பிறவும், வாய்த்தசமயத்தை வறிதேவிடாமல் தனக்குஅதுஒரு இலாபமாய் முடியும்படி சில கருவிகளைக் கையாளப் பழகியுள்ள புத்தியின் தேர்ச்சியேயாம். சுயவாராய்ச்சியில்லையாயின் நம்முடைய புத்திக்கு இவை தவிர வேறு பயன் உளதெனும் எண்ணமும் நேர்ந்திடாது. கல்வி என்றசொல் இப்பொழுது இவ்விதம் கருவிகளைக் கையாண்டு ஒருவன் முன்னுக்கு வருவது என்னும் பொருளையே பெரும்பாலோருக்குத் தந்து நிற்கின்றது. இதற்காகத்தான் நம் பள்ளிக்கூடங்களும் சர்வகலாசாலைகளும் நடைபெறுகின்றன. புத்தியின் இத்தகைய பயிற்சிக்காக நம் சிறுவர்களுக் கியற்கையான தருமசிந்தனையும் தெய்வசிந்தனையும்பலியிடப்படுகின்றன. புத்தியினது தேர்ச்சிக்குரிய பெருமையை நாமிங்கு அவமதிக்கின்றோமென்றெண்ணவேண்டா. மனிதரது நன்மைக்கும் பெருமைக்கும் இயற்கையாயமைந்துள்ள அம்சங்களில் புத்தியும் ஒன்றென்று முன்னரே கூறியிருக்கின்றோம். தருமசிந்தனையையும் தெய்வசிந்தனையையும் தரைமட்டமாக்கிப் புத்திக்கு ஒரு கோபுரங்கட்டுகின்ற கொள்கையே குறையுடைத்து. தருமசிந்தனைக்கு மேலே புத்தியின் கூர்மையை உயர்த்தாதிருந்தாலன்றி உய்யமாட்டோம். புத்தியும் தருமமும் ஒன்றையொன்று பின்பற்றி நடப்பது போகத் தருமமென்பதொன்று இருப்பதையே மறந்ததற்கு எதிராகப் புத்தியைச் செலுத்துவதெல்லாம் பாழும் பறந்தலைக்குக்கொண்டுசேர்க்கும் சாமர்த்தியமாகவே முடியும். சோர்தல் இன்றிச் செம்மையாய்த் தம் புத்தி வளரவேண்டுமென்னுங் கருத்துடையவர் அவ்வளர்ச்சி தருமசிந்தனையையேமுதல் ஆதாரமாகக் கொண்டுஆரம்பிக்கவேண்டுமெனும் அவசியத்தையும் மறத்தலாகாது. புத்தியினது நேர்மையைச் சாதிப்பதற்குக் கருவிகளைத் திறமையுடன் பயிலும் தேர்ச்சி மாத்திரம் போதாது. தருமத்திற்கெல்லாம் உயிராய நிஷ்காம்யநிலையை அது தன்னுடைய பயிற்சியால் அடைவதற்கும் ஆவன செய்தல்வேண்டும். புத்தியின் முடிவு மெய்ம்மையை அறிதல். ஒரு பயன்கருதித் தேடுவோமாயின்மெய்ம்மையை அடையமாட்டோம் மெய்ம்மையை அதனிற்காவே தேடுதல் வேண்டும். புத்தியின் வளர்ச்சிக்கு இடம் இந்நிலையிற்றான் இருக்கின்றது. இந்நிலையே நில்லாமல், விஷயங்களின் அறிவினால் 'முன்னேற்றம்' அடைவதென்னும் நோக்கத்தோடு ஊக்கமுடன் செலுத்தப்படுகின்ற புத்தி நெறிகெடப்பிறழ்ந்து நெடிதே உழல்வதாகும். காலவேகம் களிமயக்குற்றதெனத் தருமமெனும் தறிமுறித்துத் தெய்வமெனும் பாகெறிந்து, உற்றார் பெற்றார் பெருநாட்டார் அலமர, பாறும் பருந்தும் கழுதும் உடன் தொடர, சென்றவிடமெல்லாம் சிதைத்துவீழ்த்துங் கொடுமையுடையதாய்ப் பற்பலர் புத்தி பாய்ந்தோட நாம் இந்நாள் காணும் கோலத்திற்கெல்லாங் காரணம் "எனக்கொரு இலாபம்; நமக்கொரு பயன்" என்று முறையிடும் முன்னேற்றம் என்னும் மூடியால் மாந்தர்தம் அகத்துள ஒளி இருளடையும்படி மறைந்துகிடத்தலேயாம்.இவ்வொளி மறைந்திருப்பதால் புத்திமான்களிற்பலர் தாமே மதிமோசம்போவதுமல்லாது மற்றவரையும் அவ்விருளில் வரவழைத்து ஒருவரோடொருவரை முட்டவிடுகின்றனர். முன்னேற்றமென்னும் இவ்விருளே மேலான வொளியென்று வாதிக்கக் கூறும் தம் குதர்க்கங்களில் தாங்களே சிக்கிக்கொள்ளவும் நேர்கின்றது. இராஸயன சாஸ்திரங்களிலும் தத்துவ சாஸ்திரங்களிலும் தம் புத்தியைச்செலுத்தியுள்ள சிலர் தங்கள் சாதுர்யத்தால், மானுட தர்மத்திற்கும் பெருமைக்கும்முத்திக்கும் ஆதாரமானமுழுமுதல் மெய்ப்பொருளிற்கே இறுதிகாண இசைந்துள்ளார். மற்று, சாதாரண புத்தியேயல்லாமல் சிறப்பாகவொன்றும் இருந்திலாதாரிற் சிலர், தருமத்தின்பால் தங்கிய நல் பற்றுடையவராகி, அகன்றஅன்பினாலும் நிலைத்த பக்தியாலும் பெருகிவளர்ந்த புத்தியுடையவராதலும் காண்கின்றோம். தன்நயம் எம்நலம் என்னும் படுகுழிகடந்து உயர்ந்தவர்கள்தாம் குணமென்னுங் குன்றேறி நின்றவர் ஆவார். அத்தகைய உயரத்தில் இருப்பவர்க்குத்தான், உலகத்தின் உண்மையும் விஷயங்களின் தன்மைகளும் முழுமையாய்த் தென்படும். சுயநயம் என்னும்சுமைஅகன்றாலன்றிப் புத்தியானது பரவிவளர்வதற்கு இடமில்லையே. புத்தியின் வேளாண்மைக்குத் தருமமும் தெய்வமும் இன்றியமையாதன. நிஷ்காம்யமாகப் புரிகின்ற தருமமே, மெய்ம்மைக் கிடந்தருமாறு மனத்தைத் திறந்துவைக்கின்றது. இவையிரண்டும் ஓரினத்தன. என்றுமுள இவ்விரண்டிற்கும் அலகில்லை, அழிவுமில்லை.

புத்தியின் கூர்மைக்கும் தருமசிந்தனைக்கும் உள்ள தொடர்பைக் கருதாமல் யாவரும் விவகரித்துவருவதாலும், முன்னதற்குப் பின்னதைப் பெரும்பாலும் ஜனங்கள் பலியாக்க விடுவதாலும், விளைகின்ற தீமைகளை விரித்துரைக்க இப்பத்திரிகையின் இடமெலாம் போதாது. சாமர்த்தியம் சாமர்த்தியம் என்று ஒன்றினைப்பாராட்டி மேன்மைப்படுத்துமிது இக்காலத்தின் சாபமாகும். இதனால் தருமமும் தெய்வமும் பின்னிடைந்து நிற்கநேர்கின்றன. கலாசாலைக் கல்வியெல்லாம், பல்வகைச் சாமர்த்தியங்களைச் சேகரித்துக்கொள்ள உதவவேண்டுமென்பதே முதல்நோக்கமாக உள்ளும் புறமும் ஊடாடுகின்றது. இதனால், சேகரித்த சாமர்த்தியம் செம்மைநெறி செல்வதற்குஆதாரமாய மற்ற அம்சங்கள் உடன்வளர வழியின்றிக் கழியவே அக்கல்வி கற்றோருக்கும் மற்றோர்க்கும் அல்லலன்றி வேறெதனையும் விளைக்கா[illegible]ன்று. திறமை என்பது தரு[illegible] சேர்[illegible]

199171



காட்டுப்பேயை வீட்டிற்குஅழைத்துவந்த செய்தியாய் முடியும்.

முன்னிங்குரைத்தவைகளால், புத்தியைத் தருமத்திற்கும் தெய்வத்திற்கு மிணங்கியமுறையில் வளர்ப்பது சுயகல்சரின் பகுதிகளி லொன்றென்பது விளங்குவதாகும். இராஸாயனம்போன்ற பூதசாஸ்திரங்களிலும் சரித்திரம் பூகோளம் போன்ற பிறநூல்களிலும் மொழிப்பயிற்சிக்குரியவைகளிலும்மாத்திரம்தேர்ச்சியடைவதால் சிற்சில கருமங்கள்செய்யுந் திறமைபெறலாமாயினும்அவ்வளவிலேயே கல்சர் அடைந்தவராக மாட்டோம். இந்தச்சாத்திரங்களினறிவைக்கொண்டு எந்திரமும்வர்த்தகமும்செய்யுமொரு பயனைச்சிந்திப்பதற்குமுன் அச்சாத்திரங்களின் விஷயங்களையெல்லாம் தொகுத்துப் பொதுவுற நிற்குமோர் மெய்ம்மையை உணர்தற்கு நமதுபுத்தி நாடுமாறு அது பயின்றிருத்தல் வேண்டும். தெய்வத்தோடுந் தருமத்தோடும் பழகிமுதிர்கிற புத்திக்கே இந்நோக்கம் தோன்றுமேயொழியத் திறமையுடன் ஒன்று செய்வதே தலையான கருமம் என்ற நினைவிலேயே ஆழ்ந்திருக்கும் புத்திக்கு அந்நோக்கம் தோன்றுவதென்பதுஒருபோதுமில்லை. பயனை நினைத்துக் கற்குந்தோறும் இந்தச் சாத்திரங்களெல்லாம், சூறையிற் பட்ட சருகுபோல் மனிதரை ஆகாயத்தில் பறக்கவைக்கலாம், பிரளயத்தில் அகப்பட்ட துரும்புபோலக் கடலில் மிதக்கவைக்கலாம், அம்புண்ட விலங்குபோல் தரையில் ஓடவைக்கலாம், கூற்றுவன் மகிழ்ச்சிகூரப் பீரங்கிக்குண்டுகள் பண்ணவைக்கலாம், அவரவர் கழுத்திற்குக் கயிறு மணலிலிருந்துதிரித்துக்கொள்ளக் கற்பிக்கலாம்,ஆயினும்என்! "பிராக்டிகல் அப்ளிக்கேஷன்" (Practical application)என்று ஒன்றை எண்ணாமல் இச்சாத்திரங்களின்முடிவானமெய்ப்பொருளை அடைவதல்லால்பிறநோக்கங்களெல்லாம் பேதைமை என்னும் புத்தியால் அவைகளைக் கற்கும்போதும் பயிலும்போதும் சுயகல்சர் எனும் அவ்வுன்னதநிலைக்குப் படிப்படியாய் ஏறுகின்றவராவோம். புத்தி அவ்வாறு அமையாதவரையில் நமக்கு இயற்கையாயிருக்கின்ற ஒரு மாற்றறியாப்பொன்னைக் கரியாக்கிக்கொண்டிருப்பது திண்ணம். இதுவே இக்காலத்தவர்கையாளும் தலைகீழ்இரஸவாதம்.சுயவாராய்ச்சிச்சக்தியைச் சிறிதுஉபயோகப்படுத்தித் தம்மையும் தம்மைக்கொண்டுதம்போல் விவகரித்துவரும் பிறரையும் சோதித்துப் பார்த்தவர்களுக்கு இச்செய்தி இரகசியமன்று. எவரது புத்தியில் இது எந்நாள் பட்டதோ அன்றைக்கே அவரது சுயகல்சர் ஆரம்பமாயிற்று.

# இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

[312-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 1.

இடம்:—ஹார்ட்காஸல் வீட்டில் ஓர் அறை.

[ஹார்ட்காஸல் வருகிறார்.]

ஹார்ட்:—தன்னுடைய புதல்வனை மிகவும்அடக்கமுடையவனென்று என்பழைய நண்பர் ஸர் சார்லஸ், என்னிடம் அனுப்பியதன் பொருள் என்ன? இரும்பிற்கு நாக்கிருந்து பேசுமானால், அது இவனைவிடத் துடுக்காகப் பேசக்கூடுமென்று நானே எண்ணவில்லை. தன்கால் செருப்பைக்கழற்றி என்னிடங் கொடுத்துச் சாக்கிரதையாக வைக்கும்படி சொல்கின்றான். சாய்வு நாற்காலியில் கால்களை நீட்டிக்கொண்டு என்னெதிரே கிடக்கின்றான் இந்தத் துஷ்டத்தனத்தை என்பெண் எப்படிப் பொறுக்கிறாள் என்பது தெரியவேண்டும். தெரிவதென்ன! அவள் இவைகளைக்கண்டு திடுக்கிட்டுப் போயிருப்பாள்.

[காதெரின் வருகிறாள்]

ஹார்ட்:—நல்லது காதெரின், நான் சொன்னபடி, உன் ஆடம்பரஉடைகளை மாற்றிச் சாதாரண ஆடைகள் அணிந்திருக்கிறாய் என்பது தெரிகின்றது. எனினும், இப்படி மாற்றுவதற்கு ஏதேனும் அதிக அவசியம் இப்பொழுது ஏற்பட்டதோ?

காதெரின்:—உங்கள் கட்டளையின்படி நடப்பதே எனக்கு இஷ்டம். அது சரியோ தப்போ என்றுகூட நான் கேட்பதில்லை.

ஹார்ட்:-இருந்தாலும், காதெரின், நீ கேட்கவேண்டியதே அவசியமாகும்படி நானும் இடம் கொடுத்துவிடுகிறேன். உதாரணமாக,இந்தஅடக்கமுள்ள இளைஞனை நீ காதலனாகக் கொள்ளவேண்டு மென்றேனே.

காதெரின்:—அபூர்வமான தொன்றை நான் எதிர்பார்க்கும்படி நீங்கள் கற்பித்தீர். முதலாளியோ உங்கள் வர்ணனையை அதிகம் கடந்துவிட்டார்.

ஹார்ட்:—என்னை இப்படித் திடுக்கிடச் செய்தது என் ஆயுளில் இதுவரையில் வேறொன்றுமில்லை. என் உணர்வையெல்லாம் உழக்கிவிட்டான்.

காதெரின்:—நானும் பார்த்ததில்லை. உலகானுபவமும் உடையவர்.

ஹார்ட்:—இவைகளை எல்லாம் அவன் கலாசாலைகளில் கற்றுக்கொண்டான். பள்ளிக்கூடத்தில் ஒருவன் அடக்கம் கற்றுக்கொள்ளக் கூடும் என்று எண்ணினேனே நானொரு மூடன். இதைவிட, வேஷக் கூத்தில் ஞானோபதேசம் பெறுவது சுலபமாயிற்றே.

காதெரின்:—அத்தனையும் அவருக்கு இயற்கையாகவும் தோன்றுகின்றது.

ஹார்ட்:—கெட்டசகவாசமும்அவனுடைய இயற்கைக்குமிகவும் உதவியாயிருந்திருக்கவேண்டுமென்று எண்ணுகிறேன்.

காதெரின்:—அப்பா, இதில் ஏதோ பிழையிருக்கின்றது. கெட்ட சகவாசம் உடையவனுக்கா அந்தப் பயந்த பார்வை—அந்த வார்த்தைத் தடுமாற்றம்—அந்த நாணிய நடத்தை—

ஹார்ட்:—யார் பார்வை? யார் நடத்தை? குழந்தாய்!

காதெரின்:—ஏன்? மார்லோவின் பார்வை, மார்லோவின் நடத்தை. முதல் முதல் என் கண்ணில் தென்பட்டது அவருடைய கூச்சந்தானே.

ஹார்ட்:—அப்படியானால், உன் கண்கள் உன்னை மோசம்செய்துவிட்டன. முதல்முதல், உணர்ச்சியற்ற மரம் இதுபோல வொன்று நான் கண்டதில்லையே.

காதெரின்:—போங்கள் அப்பா, என்வாயைக் கிள

றுகிரீர். இவ்வளவு அடக்கமுடைய ஒருவரை நானே வேறு பார்த்ததில்லையே.

ஹார்ட்:—என்ன, காதெரின், நிசமாகவா நீ பேசுகின்றாய்! துள்ளித்துள்ளிக் குலைக்கின்ற நாயாயிற்றே அது.

காதெரின்:—என்ன ஆச்சரியம் இது! மரியாதையுடன் வணங்கி, தன் வாயினுள் வார்த்தை தடுமாறத் தரையில்தைத்த பார்வையுடன் அல்லவோ என்னைச் சந்தித்தார் அவர்.

ஹார்ட்:—என்னிடத்திலோ, என்ன குரலெடுப்பு, என்ன பிரபு தோரணை, என்ன அலக்ஷியம்,—என் இரத்தமெல்லாம் உறைந்துவிட்டதே.

காதெரின்:—என்னையோ மிகவும் மரியாதையுடன் நடத்தினார். இக்கால நடத்தைகளைக் கண்டித்தார். ஒருபோதும் சிரிக்காத பெண்களே சிறந்த அறிவினர்கள் என்று பாராட்டினார். தான் என்னைச் சலிக்கச் செய்கின்றாரோ என்று கேட்டுக் கேட்டு என்னைச் சலிக்கும்படி செய்தார். அப்புறம், தலைமிக வணங்கி, "அம்மா, உன்னை இன்னும் காக்கவைப்பது அழகன்று" என்று கூறிக்கொண்டே அறையைவிட்டுப் போய்விட்டார்.

ஹார்ட்:—பிறந்ததுமுதல் என்னைத் தெரிந்திருப்பவன்போ லல்லவோ என்னுடன் பேசினான். இருபது கேள்விகள்கேட்டான், ஆனால், பதிலிறுக்கோ காத்திருக்கமாட்டான். என் பேச்சை இடை இடையே அற்ப வம்புகள் கூறித் தடுத்துவிடுவான். மார்ல்பரோ பிரபுவையும் யூஜீன் அரசனையும் பற்றிய அந்தச் சிறந்த செய்தியை நான் சொல்லிவரும்போது, நான் சமையல் வேலையில் கைதேர்ந்தவனா என்று கேட்டான். ஆம், காதெரின், சமையல் வேலையில் கைதேர்ந்தவனா என்று உன் தந்தையைக் கேட்டான் அவன்.

காதெரின்:—நம்மிருவரில்ஒருவர்சொல்வது பிழை என்பது நிச்சயம்.

ஹார்ட்:—தன்னைத் தெரிவித்துக்கொண்டபடியே அவன் இருப்பானாயின், என் சம்மதம் அவனுக்குக் கிடைக்காது, நிச்சயம்.

காதெரின்:—நான் நினைக்கிறபடி அவன் அந்தத் தொங்குமூஞ்சியா யிருப்பானாயின், என் சம்மதமும் கிடைக்காது, நிச்சயம்.

ஹார்ட்:—ஆயின், நாம் இருவரும் ஒன்றிற்குச் சம்மதப்பட்டிருக்கிறோம்—அவனைத் தள்ளிவிட.

காதெரின்:—ஆம், ஆயினும், சில நிபந்தனைகள் உண்டு. சிறிது துஷ்டத்தனம் குறைந்தவனாக நீங்களும் சிறிது தைரியம் மிகுந்தவனாக நானும் அவரைக் காண்போமானால்,—மரியாதை யுடையவனாக நீங்களும், நெருக்கி நெருக்கிப் பேசக்கூடியவனாக நானும் அவரைக் காண்போமானால்—எப்படியோ தெரியாது—ஆள் உருவாக இருக்கிறார்—கடைத்தெருவில் இப்படி யொருவனைக் காணமுடியாது.

ஹார்ட்:—அவ்விதம் மாறுவானானால்—மற்று, அதுதான் முடியாதே. முதல்பார்வையிலேயே என் காரியம் முடிந்துவிட்டது. அது தவறுவதில்லை.

காதெரின்:—அந்த முதற்பார்வைக் கடியில் நல்ல குணங்கள் அநேகம் இருக்கவுங்கூடும்.

ஹார்ட்:—ஆகா, ஒரு இளைஞனது வெளித்தோற்றம் ஒரு பெண்ணின் கண்களுக்குப் பகட்டாயிருந்துவிட்டால், பிறகு அவனுடைய உள்ளலங்காரத்தையெல்லாம் ஊகிக்கத் தலைப்பட்டுவிடுவாள் அவள். மழமழவென்று இருக்கின்ற முகத்தையே அறிவின் அடையாளமென்றும், அழகிய வடிவம் எல்லா ஒழுக்கங்களுக்கும் உறைவிடமென்றும் கொள்கின்றாயோ, பேதாய்.

காதெரின்:—என் புத்தியை மெச்சித் துவக்கிய உங்கள் பேச்சு என்னை அசடன் என்று இகழ்வதிலா முடியவேண்டும்.

ஹார்ட்:—கோவித்துக் கொள்ளாதே, பெண்ணே, இந்தத் நடுக்குவாய்த் துரை, இன்னமும் தன்முரண்பட்ட தோற்றத்தை மாற்றிக்கொள்ள வல்லவனானால், ஒருகால், நம் இருவரையும் ஒருங்கே திருப்தி செய்யினும் செய்யலாம்.

காதெரின்:—நம் இருவரில் ஒருவர் எண்ணியிருப்பது தப்பென்பது வெளிப்படை. ஆகையா லினிமேலும் சென்று விசாரிப்போம்.

ஹார்ட்:—சம்மதம். இருப்பினும், நானே சரி என்பதை நிச்சயமாய் வைத்துக்கொள்.

ஹார்ட்:—நான் சொல்வதும் அதிகம் தப்பில்லை என்று நீங்களும் நிச்சயமாக வைத்துக்கொள்ளுங்கள்.

[போகின்றனர்]

# அப்பர்

## அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[313-வது பக்கத் தொடர்ச்சி]

இராமர் சக்கரப்பிரயோகம் செய்தாரென்று வால்மீகி முனிவர் கூறவில்லை. இராவணயுத்தம் நடந்தபின்னர் இராமர் மீண்டும் சேதுபந்தனம் ஆரம்பித்துஇக் கரைக்கு வந்ததாகவும் கூறப்பட்டிருக்கவில்லை. சிவபக்தரான இராவணனியரைச் சங்கரித்த இராமர் அப்பாவம் நீங்குவதற்குச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தது வைணவசமயத்தாருக்கு ஒவ்வாததுபோலும். ஆதலால் வைணவ நூலாசிரியர் எழுதிய இராமாயணத்தில் இராமலிங்கப் பிரதிஷ்டையைப்பற்றி யாதும் காண்பதரிது. இராவண யுத்தம் முடிந்தமறுதினமே பதினாலு வருடங்கள் முற்றியதாகவும், அன்றே அயோத்திக்குச் செல்லவேண்டுமென்று இராமனைப் பார்த்துத் தேவர்கள் பின்வருமாறு உரைத்ததாகவும் கம்பராமாயணம் கூறும்.

இன்று சென்றுநீ பரதனை யெய்தலை யென்னின்
போன்று மாலவ ணெரியிடை யன்னது போக்க
வேன்றி வீரநீ போதியா லென்பது விளம்பா
நின்ற தேவர்க ணீங்கின ரிராகவ னினைந்தான்

—கம்ப ராமாயணம் - யுத்த காண்டம், மீட்சிப் படலம்

இன்னவாறு தேவர்கள், ஸ்ரீராமர் வனவாசத்திற்கென்று ஏற்பட்ட பதினான்கு வருடங்கள் அன்றே கழிந்தன வென்று அவருக்குக் கவனமூட்டியதாகக் கம்பன் மொழிகின்றான். அத்துடன் நிற்கவில்லை; மற்றும்,



ஆண்டு பத்தொரு நாலுமின் றோடறு மாயின்
மாண்ட தாமினி யென்குலம் பரதனே மாயின்
ஈண்டு போகவோ ரூர்தியுண் டோவென்ன வின்றே
தூண்டுமான முண்டென்றடல்வீடணன் றெழுதான்.

—மீட்சிப்படலம்.

என்னவும் கம்பன் கூறுவான். இராமலட்சுமணர்கள் அதுகாறும் தாம் கழித்த நாள்கணக்கு அறியார்போலும்! தம் முற்பதவி யறியாரேனும், சாமானியர் திறமையும் ஞாபக சக்தியையும் இவர் இழந்தனரென்பது வெறும்பொய் யன்றோ? வால்மீகியின் நூலிலோ இராமர், இராவண யுத்தத்திற்குப் பின்னர்ப் பரத்துவாச ஆசிரமத்திற்குவிமானத்தில்வந்ததாயும், அன்று பதினாலுவருடம் முடிந்ததால், தனது வருகையைப் பரதனுக்குத் தெரிவிக்கும் பொருட்டு அனுமனை அனுப்பினாரென்றும், அவ்வாறு தெரிவிக்கையில் பரதன் இவ்வருகையை உவகையோடு கொள்கின்றானோ, அல்லது வருத்தத்துடன் கொள்கின்றானோ வென்பதை அறிந்து தனக்குத்தெரிவிக்கும்படி அனுமனுக்குக் கட்டளையிட்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது. அதைமாற்றித் தன் மனப்போக்கின்படி கம்பன் எழுதியதுஅடாத காரியம். "புளுகினாலும் பொருந்தப் புளுகவேண்டு' மென்பது பழமொழி. அவ்வாறு பொருத்தமாகவே பொய்க்கோவை கோக்காதது கம்பன்கல்வித்திறத்திற்கும் கலைக்குந் தக்கதன்று.

இதன்றியும் பரதன், இராமன் குறித்த காலத்தில் வாராமையால் எரியில்விழத் துணிந்தானென்றும் அநுமான் அவ்வெரியைக் கரியாக்கித் தன் வரவின் விவரங் கூறியதாகவும் கம்பன் கூறுவதும் வால்மீகி யுரைக்காததாம். அவ்வெரி கம்பன் கொளுத்தி அவித்ததேயாகும். இயற்கைக்குப் பொருந்தாத (Unnatural)சம்பவங்களைக் கலந்துகொள்ளக் கம்பன் அஞ்சவில்லை. வால்மீகி கூறுகின்ற இராமன், இயற்கைத் தத்துவம் பொருந்திய அரசகுமாரனாக, கம்பன் கூறும் இராமனோ இயற்கைக்குப் பொருந்தாமல் அவர் கவிக்கு மாத்திரம் பொருந்திய ராமனேயாம். ஆதலால் வால்மீகி இராமருக்கு வனவாசக் கணக்கை நினைப்பூட்டும் அவசியத்தைக் காணவில்லை. மற்றும் ஏனையோரும் இவ்விருவர் நூல்களிலு மவ்வாறே மாற்றப்பட்டனர்

தமிழ்நாட்டில் இராமர்தங்கிபோதுசெய்தசெயல்களின் விவரம்அத்தனையும் வால்மீகிக்குக்கிடைக்காதிருக்கலாம். ஆகையினால், இராமர் தமிழ்நாட்டில் சிவபூசை செய்ததும், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்ததும் கம்பனும் அறிந்திலன்போல் காவியம் எழுதியது சிறந்த செய்கையன்று. வால்மீகியையே கடைப்பிடித்துத் தான் எழுதியதாய்க் கம்பன் கூறுதல் முற்றும்பொய். இலக்குவன் பதினான்குவருடம் நித்திரையும் உணவுமின்றி யிருந்ததாக வால்மீகி கூறவில்லை. அக்காலத்தில் ஆரியப்பிராமணர்களும் மாமிச வுணவு உண்பவர்களாக இருந்தன ரென்பதற்கு வடமொழி நூற்களிற் பல சான்றுள. அகத்தியர் வசிஷ்டர் முதலானோர் அசைவபோசனமுண்டாரெனில், மற்றோருக்கு ஆரிய தேசத்தில், எத்தகைய உணவிருந்ததென்பதை மொழிவது அனாவசியம். ஆயினும் உணவில் சைவனான கம்பன் க்ஷத்திரியனான இராமனையும் காட்டில் வசிக்கும்போதும் சைவ உணவான காய் கனிகளைத் தின்னவைத்தது வால்மீகி கூற்றைச் சீர்திருத்தியதுபோலும். அக்காலத்தில் ஊன்விரும்பும் மாந்தர்க்குக் கோசலநாட்டில் நாடோறும் யாகங்களும் வேட்டைகளும் நிறைந்திருக்க, குலோத்துங்கன் அரண்மனை விருந்துகள்போல்,

முந்துமுக் கனியி னானு
　　முதிரையின் முழுத்த நெய்யிற்
செந்தயிர்க் கண்டங் கண்டம்
　　இடையிடை செறிந்த சோற்றில்
தந்தமி லிருந்து தாமும்
　　விருந்தொடுந் தமரி னோடும்
அந்தண ரமுத ருண்டி
　　அயில்வுறும் அமலைத் தெங்கும்

—பால காண்டம் - நாட்டுப் படலம்-50.

இருந்ததென்பன் கம்பன். ஆராய்ந்து நோக்குங்காலையில் கம்பன் எழுதிய கோசலநாடு, வால்மீகி காட்டிய கோசலமன்று; கம்பன் காலத்திய சோணாடே யென்பது திண்ணம். அயோத்தியாபுரி என வர்ணித்தது உறையூரேயாம். சரையுநதி வர்ணனை காவிரியின் விவரமே. கோதுமை விளையும்நாட்டில் நெல் மலைகளைக் கம்பன் குவித்தான். கடல் இவ்வா றிருக்குமென்று காணக்கூடாத உள்நாடாகிய கோசலத்தில்

கலஞ் சுரக்கு நிதியங் கணக்கிலா
நிலஞ் சுரக்கு நிறைவள நன்மணி —என்றனன்.

காய் கறி, பருப்பு, "முத்தனைய அரிசி" அனையஇவையெல்லாம் குப்பல்குப்பலாய் அன்னசத்திரங்களில் குவித்துவைத்திருப்பது தமிழ்நாட்டின் காட்சியே:—

பிறைமு கத்தலை பெட்பினி ரும்புபேழ்
குறைக றித்திரள் குப்பை பருப்பொடு
நிறைவெண் முத்தி னிறத்தரி சிக்குவை
உறைவ கொட்பின வூட்டிடந் தோறெலாம்

—பாலகாண்டம் - நாட்டுப் படலம். 69.

என்னக் கோசலநாட்டை வர்ணித்தவன், அத்துடன் திருப்தியாகாமல், சுமார் ஐந்நூறு மைல்களுக்குஅப்புறத்திலேகாணப்படும் நெய்தலையும் அவ்விடம் வரவழைத்து, தென்னாட்டுக்கு உரிய செவ்வழிப் பண்ணை, நுளைச்சியரால் பாடவைப்பதும் காண்க:—

கொன்றை வேய்ங்குழற் கோவலர் முன்றிலிற்
கன்று றங்குங் குரவை கடைசியர்
புன்ற லைப்புனங் காப்புடை போதரச்
சென்றி சைக்கு நுளைச்சியர் செவ்வழி"*

—பாலகாண்டம் - நாட்டுப் படலம் 65.

என்றான். கம்பனைப் பழிப்பதற்காக இம்மேற்கோள்கள் காட்டப்படவில்லை. கல்விமலையின் சிகரத்திற்குச் சென்ற கவிகளுக்கு, இத்தகைய பித்தேறுவது எந்த நாட்டிலும் மரபே. மேல்நாட்டிலும் ஷேக்ஸ்பியர்கவி எழுதிய நாடகங்களில், புராதன கிரீக்கர் ரோமர் முதலானோர் கதைகளை நாடகமாக்கியபோது அந்நாடக அங்கங்களெல்லாம் ஷேக்ஸ்பியர் † நாட்டைச்சுற்றியிருந்தனவேயன்றி, உண்மையில் புராதனமான தொ

* இச் சம்பந்தர் தேவாரத்தை ஒப்புநோக்குக—
பெருந்தண் சாரல் வாழ்சிறை வண்டு பெடைபுல்கிக்
குருந்தம் மேறிச் செவ்வழி பாடுங் குற்றாலம்
இருந்துண் தேரும் நின்றுண் சமணு மெடுத்தார்ப்ப
அருந்தண் மேய நன்னகர் போலு மடியீர்காள்.
—திருக்குற்றாலம் - பண் - குறிஞ்சி - 10

† All Shakespeare's archaic characters & Dramatis personae were clearly & unmistakably Elizabethian.

m 21, N28 KN
19917

ன்றுமில்லை. அதுபோல் கம்பனும் வால்மீகியை முதல்நூலாகக் கொண்டதும், பலநூற்றுண்டுகளுக்கு முன்னிருந்த தசரத ராச்சியத்தைச் சோழ ராஜ்ஜிய உடையிற் காட்டியதேயாம்.

கம்பன் தமிழிலிருந்த சங்கராமாயணத்தைத் தழுவாது எழுதியதும், இராமலிங்கஸ்தாபனத்தைச்சொல்லாததும் எக்காரணத்தாலெனின், இது, கம்பன் காலத்தில் வைணவ சமயம், சைவசமயத்திற்கு எதிராய் நின்றதின் பயனே யாம். பௌத்தரும், சமணரும் பேரற்று ஒழிந்த குலோத்துங்கன்காலத்தில் இந்துமத உட்பிரிவுகளாகிய சைவ வைணவ சமயங்கள் ஒன்றினேடொன்று வழக்கிட ஆரம்பித்தன. அக்காலத்தில் தொடங்கிய வழக்கு இக்காலத்திலும் முடியாதிருக்கக் காண்கின்றோம். சமரச ஞானியாகிய தாயுமானவரும் இந்தப் போரைக்குறித்துத் தன் அபிப்பிராயத்தைத் "தேன் முகம்" என்னும் அவர்பதிகத்தில் மும்மூர்த்திகளின் தன்மையை ஆராயுங்கால், பின்வருமாறு பாடுகின்றார்—

அல்லலாந் தொழில்ப டைத்தே யடிக்கடி யுருவெ டுத்தே<br>
மல்லல்மா ஞாலங் காக்க வருபவர் கடவு ளென்னில்<br>
தொல்லையாம்பிறவிவேலைதொலைந்திடா திருணீங்காது<br>
நல்லது மாபை தானும் நானென வந்து நிற்கும்.

நானென நிற்கு ஞானம் ஞானமன் றந்த ஞானம்<br>
மோனமாயிருக்கவொட்டா மோனமின்றாகவேதான்<br>
தேனெனருசிக்குமன்பாற்சிந்தைநைந் துருகும்வண்ணம்<br>
வானென நிறைந்தா னந்த மாகடல் வளைவ தின்றே.

இவ்வாறு நிகழ்ந்துவந்த சமயவாதச்செய்கையே கம்பன், இராமர்சிவபக்தியைஎடுத்துக்காட்டாது விட்டதற்குக் காரணமாகும். சிவபக்தனை *வாலியைச் சிவபக்தனென்றே கம்பன் கிஷ்கிந்தா காண்டத்தில் விவரிக்கவில்லை. வாலிசைவனாதலால், அவன் சேனைசமுத்திரமுழுதும் அச்சமயத்தோரே யென்பது அக்காலத்திற்கு விபரீத அநுமானமன்று. இராமர் காலத்தில் தென்னாடு முழுவதும் சைவ நாடே. காளத்தி, திரிச்சிராபள்ளி, சுவேலமலை இம்மூன்றும் தட்சண கைலாய மெனப்பட்டன. பொதியமலையில்வசித்த அகத்தியரும் சைவரே. அகத்தியர் இராமருக்கு நண்பராய் உதவிசெய்தவர். ஆதலால் எவ்விடத்தும் அக்காலத்தில் பரவியிருந்த சைவ சமயத்திற்கு உடன்பாடிலாதவராய் இராமர் இருந்திருப்பாராயின், தென்னாட்டாருடன் அத்துணை அன்பாய்க் கலந்திருத்தல் அரிது. இராமர்நகரில் வழங்கியதும் தமிழென்பது வால்மீகியால் அநுமான் உருக்காட்டும் இடத்தில் வெளியாதல்போல், அக்காலத்தில் இந்தியநாடு முழுவதும் பரவியிருந்த சமயம் சைவமென்பதும், ஆரியர்களால் வைணவம் அச்சமயத்திற்கு அபேதமாய்க் கண்ணுக்குப் புலப்படாவாறு சிறிது சிறிதாய் நுழைக்கப்பட்டதென்பதும் ஆராய்ச்சியில் வெளியாகும். இவற்றை வெளியாக்க வேண்டியவனாகிய கம்பன் வெளிப்படுத்தாமையாலே, அவன் இராமாயணத்தை, அக்காலத்தியபுலவர் தில்லைவாழ்தீக்ஷதர் முதலானோர் விரைவாய் அங்கீகரிக்காமல், ஆலசியம் செய்தனர்போலும். கம்பன் கல்வியிற் பெரியனாதலால், அக்காலத்திய புலவர் அவனைவெல்லற்கு நாத்திறம்பெறாதிருந்தனர். அதே ராமாயணம் வேறு ஒருபுலவன் செய்திருப்பானாயின் அந்நூல் ஒட்டக்கூத்தன் முதலானோரிடம் என்ன பாடுபடுமோ நாம் அறிகிலோம். ஆதலால் தென்னாட்டில் கம்பனுக்குச் சில நூற்றுண்டுகளுக்கு முன்னிருந்த அப்பர் பாடிய பதிகங்களால், தென்னாட்டில் இராமாயணம் எவ்வாறு உணரப்பட்டதென்பதை இனி ஆராய்வோம்.

* Vide உத்தர காண்டம் - வாலி வாலால் கட்டுண்ட படலம்.

---

## நம்மாழ்வார் வைபவம்

### திருவாய்மொழி

[315-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பத்து, 7-ம் தசகம்.

1-ம் பாசுரம்

உண்ணுஞ் சோறு பருகுநீர்<br>
தின்னும்வெற் றிலையுமெல்லாம்<br>
கண்ணனெம் பெருமா னென்றென்றே<br>
கண்கணீர் மல்கி<br>
மண்ணி னுளவன் சீர்வள<br>
மிக்கவ னூர்வினவித்<br>
திண்ண மென்னிள மான்புகு<br>
மூர்திருக் கோளூரே.

அவதாரிகை:—இத்தசகம், பகவானிடத்தில் மோஹம் கொண்டு ஒருவராலும் நிவர்த்திக்க வொண்ணு ஒரு பிராட்டியின் தாயார் அலற்றுகின்றபடி பாடப்பெற்றுள்ளது. இத்தாயார் நண்பர்களைக் கொண்டும் இப்பிராட்டியின் அருமைத் தோழியைக் கொண்டும் தன் பெண் மோஹத்தை நிவர்த்திசெய்ய இயலாமற் போய்விட்டதால் நிரம்ப வியஸநப்பட்டு இன்னசெய்வதென்று ஒன்றும் அறியாமல் பிரமித்துத் திகைத்து நெடும்போது வரையில் ஒன்றையும் உணரக்கூடாத தசையை அடைந்தாள். அச்சமயத்தில் இவள்பெண் அங்குள்ள ஒருவருமறியாமல் திருக்கோளூரில் கோவில் கொண்டிருக்கும் எம்பெருமானிடத்திற்கு ஏகிவிடவே இவளது அன்னை தன்புத்தி ஒருவாறுதெளிவு பெற்றதும், தன் பெண் திருக்கோளூர் எம்பெருமானைத் தேடினவளாய் வழியில்போகிறவர்களை அவ்வூருக்கு வழிக்கேட்டுக்கேட்டு அந்த க்ஷேத்திரத்தை அடைந்திருப்பாளென்று ஊஹித்துப்பேசித் தன்பெண்ணின் அவஸ்தையைத் தெரிவிக்கிறாள். பெண்களுக்கு உடன்போக்கினால் நிந்தைக் கிடமாகும். இப்பெண் நாடித்தேடிப் போயது திருக்கோளூர் எம்பெருமானாலும், ஒரு சிறு பெண் யாதொரு கூட்டும் துணையுமில்லாமல் திருக்கோளூருக்கு அழுத கண்ணீருடன் எல்லாருமறிய வழிவினவிப் போனது தாழ்வென்பது தாயின் அபிப்பிராயம்.

சுபாவதேசத்தில் நம்ஆழ்வார் மானஸாப்பிரயாணமாய்த் திருக்கோளூருக் கெழுந்தருளினதால் தம்முடைய தெசையைக் கண்ட நேசரும் அநுபந்திகளும் மனவருத்தப்பட்டு வருந்துவதைத் தாமே அந்நியாபதேசத்தாலே பேசிக்கொண்டு தனது ஸொந்ததெசையை எம்பெருமானுக்கு அறிவிக்கின்றார். இப்பத்தின் முதல் தசகத்திலேயே "வைகல் பூங்கழிவாய்" இல் பகவானுக்குத் தன் வித்தியை விண்ணப்பஞ்செய்யத் தூதுவிட்டதை நாம் கண்டோம். அதற்கு, பகவான் எழுந்தருளாதிருந்தவாறே பிரணயகலகப்பட்டு, கண்ணனாக அவன் பிறகு எழுந்தருளியதை "மின்னிடை மடவார்" இல், பிரணய கோபத்தாலும் வெகுகாலம் பிரிந்து தனித்திருக்கும்படி விட்டுவிட்ட வியஸநத்தாலும் உபேக்ஷை செயததையும் கண்டோம். அத் தசகத்தினிறுதியில் கண்ணன் காட்டியருளிய விநயத்தாலும், "உலக ரக்ஷணத்தைச்சுமந்துநடத்து மெனக்கு நீ நினைத்தபோது உடனே வரலாகுமோ" என்ற அவனது மாதுரிய சாதுரிய வார்த்தைகளாலும் ஸாஹஸங்களாலும் இதற்குமேலாக அவனது திவ்விய ஸௌந்தரியத்தாலும் ஊடல்தீர்ந்து ஸொஸ்த்த சித்தராய் இனி எம்பெருமானோடு கலப்போமென்றிருந்த ஆழ்வார், மூன்றும் தசகத்தில் திருவண்ணகரத்து எம்பெருமானது விசித்திர சக்தியைத் துதித்ததையும் படித்தோம். நாலாம் தசகத்தில், ஒருவாறு மானஸாநுபவம்கிட்டினபோதிலும் வெளிக்கலவைபெறாமையினாலே தமக்கு விளைந்த வியஸநதசையை ஐந்தாம் தசகம்முதல் அந்நியாபதேசத்தாலே பேசிச் சோகிக்கின்றார். தூரதேசத் துறைமுகப் பட்டணத்திற்குத் தன் கப்பலைப் பெருங்கடலில் ஓட்டிச்செல்லும் ஒரு மாலுமியானவன் உஷ்ணதேச (tropics) அந்தரத்தில் பாய்மரங்களுக்குக் காற்றோட்டமில்லாமலிருப்பதுமன்றி க்ஷணக்ஷணம் மாறும் காற்றால் இங்குமங்கும் நாவாய் அலைய இருட்டும் பெருமழையும் நடுச்சமுத்திரத்தில் மோத, திக்கும் திவாணமு மறியாமல் திகைப்படைந்து கப்பலை அதின்போக்கே போகவிடுவதுபோல், தம் ஆத்மாவைப் பிறவிக்கடல் நீந்தவைத்து வைகுண்டமேகி ஸ்திரவாஸமும் பேராநந்தமுமடைய உத்தேசித்து நிர்த்தேசித்த நம்ஆழ்வார், பகவான் முன்போலத் தூதுவிட்டாலும் வாராமல் நின்றுபோனால் "என் செய்வது" என்று பயந்து, அவனது உதாஸீனமாகிற பெருங்காற்றில் தாக்கப்பட்டு, பக்தியோக மாகின்ற இடைவிடாச் சிநேக சிந்தையாகிய பேருதவியும் தனக்கு ஸஹாயமில்லாமற் போகவே ஒன்று மறிந்துசெய்ய மனப் பிரகாச மில்லாதவராய் அந்தகாரத்தில் தனித்துப் பரிதபிக்கின்றவராகி, காமவேட்கையால் கள்ளநாயகனுடன் உடன்போக்குக்குச்சம்மதிப்பவள்போல், தம்நாயகனானபகவானை அடைய அன்னைமாரும் மற்றும் யாரு மறியாமல் தனிப்போக்காய்த் திருக்கோளூருக்கு வழிகேட்டுக்கேட்டு மனந்தடுமாறி வாய்விட்டலறிச் செல்லும் வகையைக் கூறி விதனப்படும் ஒரு தாயின் பாசுரங்களால் பகவானுக்கு விண்ணப்பம்செய்கிறார். In short, Alwar cannot steer his ship being caught in the doledrums.

உரை:—இப்பொழுது காணமல் போன இந்த என் பெண், பசித்திருக்கும் வேளையில் அன்னத்தை உண்ண வேண்டுமென்று தின்பண்டங்களைக் கொண்டுபோய் அன்பர்கள் வேண்டினாலும் தாகத்திற்கு நீர்கொண்டு குடிக்க வேண்டினாலும் பின்னும் எந்த அநுபவ வஸ்துக்களைக் கொண்டுபோனாலும் இவைகளை ஆதரிக்காமல் தனக்குக் கண்ணனெம்பெருமானே சோறும் நீரும் வெற்றிலையும் என்று சொல்லி அவனைப் பெருமையாலே கண்கள் நீர்மல்கி யிருந்தவள், இந்தப் பூமிக்குள்ளே (சீர்வளம் மிக்க) அவனுடைய கல்லியாண குணங்களின் தொகுதி மிகக் காணவிருப்பதும் அவனது மிகவும் பிரீதிக்கிடமானதும் ஆகிய ஊர் எங்கு இருக்கின்றதென்று வினவி என் பெண் போகக்கூடிய க்ஷேத்திரம் திருக்கோளூராகவே இருக்க வேண்டும்—இது நிச்சயம். ஏனென்றால் வைஷ்ணவ ஸமர்த்தியுள்ள ஊர் தவிர மற்ற ஊருக்கு நான் வளர்த்த(இளமான்) இளம் பெண் போகச் சம்மதிக்கமாட்டாள், என்று தாய் சொல்லுகிறாள்.



---

## தமிழ்ப்பாடம் 121.

### வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[309-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

ஈண்டவர்க் குதவி யாய தூதென<br>
விசைப்பவற் குலக மெங்கணு<br>
நீண்டவற் குதவி யாயி னேனென<br>
நினைத்துநீ யெனைய டர்த்தியே<br>
மாண்டவர்க் குதவி யாய பேரறமு<br>
மிசையு மாண்மையும் வளர்த்திடும்<br>
பாண்டவர்க் குதவி யாகி லென்னை<br>
முடிமன்ன ரானவர் பழிப்பரோ. 61.

கண்ணனுடன் சேர்ந்துகொண்டதாக வசைகூறிய துரியோதனனுக்கு, விதுரன், 'பாண்டவர்க்கு உதவியாக நான் இருந்தாலும் முடிமன்னர் என்னைப் பழியார்' என்று காட்டுகிறான்.

பதவுரை.

ஈண்டு - இப்பொழுது, அவர்க்கு - பாண்டவர்களுக்கு, உதவி ஆய - உதவியாய் இருக்கின்ற, தூது என - தூதன் என்று, இசைப்பவற்கு - சொல்லிக்கொள்பவனும், உலகம் எங்கணும் - எல்லா உலகங்களிலும், நீண்டவற்கு - வியாபித்தவனுமான கண்ணபிரானுக்கு, உதவி ஆயினேன் - நான்உதவியாக இருந்தேன், என - என்று, நினைத்து நீ - நீ எண்ணி, எனை - என்னை, அடர்த்தியே - பகைக்கின்றாயே.

மாண்டவர்க்கு - மாட்சிமைஉடையவர்களுக் கெல்லாம், உதவிஆய - உதவியாய் இருக்கின்ற, பேர் அறமும் - பெரிய தர்மமும், இசையும் - கீர்த்தியும், ஆண்மையும் - பராக்கிரமமும், வளர்த்திடும் - வளர்க்கின்ற, பாண்டவர்க்கு - பாண்டவர்களுக்கே, உதவி ஆகில் - நான் நேராக உதவி புரிந்தால்தான், என்னை - என்ன குற்றம்?

முடிமன்னர் ஆனவர் - முடிதரித்த மன்னவர்களானோர், பழிப்பரோ - அதற்காக என்னைப் பழிப்பார்களோ—(பழிக்க மாட்டார்).

---

சொல்லி ரண்டு புகலே னினிச்சமரி<br>
னின்று வெங்கணை தொடேனென<br>
வில்லி ரண்டினு முயர்ந்தவில் லதனை<br>
வேறி ரண்டுபட வெட்டினான்<br>
மல்லி ரண்டினையு மிருவ ராகிமுன்<br>
மலைந்த காளமுகில் வந்துதன்<br>
னில்லி ரண்டுதினம் வைகுதற் குலகி<br>
லெண்ணி லாததவ மெய்தினான். 62.

விதுரன் இனிப் போர் செய்வதில்லை என்று தன் வில்லைக் கோபத்துடன் முறிக்கின்றான்.

பதவுரை.

முன் - முன்னே, மல் இரண்டினையும் - கம்ஸனால் ஏவப்பெற்ற மல்லர்கள் இருவரையும், இருவர் ஆகி - கிருஷ்ண பலராமர் என்னும் இருவராகி, மலைந்த - யுத்தம் செய்து வென்ற, காளமுகில் - கருமையான மேகம் போன்ற கண்ணபிரான், வந்து - வந்து, தன் இல் - தனது வீட்டில், இரண்டுதினம் - இரண்டு நாட்கள், வைகுதற்கு - தங்கியிருப்பதற்கு, உலகில் - உலகத்தில், எண் இல்லாத - எண்ணுவதற்கு இயலாத, தவம் - தவத்தை, எய்தினன் - எய்தப் பெற்றவனாகிய விதுரன்,

"சொல் இரண்டு - மாறான இரண்டு வார்த்தைகள், புகலேன் - சொல்லமாட்டேன்; இனி - இனிமேல், சமரில் - யுத்தத்தில், நின்று - நின்றுகொண்டு, வெம் - கொடிய, கணை - அம்புகளை, தொடேன் - தொடுக்க மாட்டேன்;"

என - என்று சொல்லி, வில் இரண்டினும் - பண்டைய இரண்டு வில்களிலும், உயர்ந்த - சிறந்ததான, வில் அதனை - அந்தவில்லை, வேறு இரண்டுபட - இரு வேறு துண்டுகளாக, வெட்டினான் - முறித்தான்.

விரிவுரை:—ஆதியில் நான்முகன் தனது தவப் பயனால் இருபெரும் வில்களைச் சமைத்தான். அவ்வில்களைக் கண்ட தேவர்கள் வியந்தனராய், உருத்திரனும் திருமாலுமே யல்லாமல், அவற்றைக் கையாள வல்லவர் யாருமிலர் என்பதைத் தேர்ந்து, அவர்பாற் சென்று, வில்லிரண்டையும் எடுத்து விளையாட்டுப் போர் செய்யுமாறு வேண்டினர். அதற்கிசைந்த இருவோரும், சிறுபோர் புரியுங்கால், சிவபிரான் கையிருந்தவில் ஓரளவு பிளவுறவே, அக்கடவுள் மூண்டசினத்தினராய், மெய்யாய போரில் முனைந்திட்டார். அருகிருந்த அமரர்கள் அவர் தாள்களை வணங்கி அமரை நிறுத்த வேண்டவே அவரும் அமர்நிறுத்தினர். பின் கடவுளர் இருவரும், தத்தம் கையிருந்த சிலையினை விண்ணவர்க் களித்துப் போந்தனர். சிவபிரான் கையிலிருந்தவில் இறுதியில் ஜனகனிடம் வந்துசேர்ந்தது. அதனைத்தான் திருமால் இராமாவதாரத்தில், ஜானகியை மணக்கும்பொருட்டு முறித்தார். திருமால் கையாண்டமற்றவில் பரசுராமனிடத்திலும்,பின்னர்விதுரனிடத்திலும் சேரலாயிற்று. பிளவுபடாத வில் ஆதலால் இதனை இரண்டுவில்லிலும் சிறந்ததெனக் கவி கூறினர். இவ்வில்லினது வலிமையும் அதையெடுத்து எய்யவல்ல வில்லாளியின் ஆற்றலையும் நன்கு அறிந்த கிருஷ்ணன், அவ்வில்லோடு விதுரனும் துரியோதனனுக்கு உதவாமல் ஒழியும்வரை, பாண்டவர்பக்கம் வெற்றி ஏற்படாதென்பது உணர்ந்து, விதுரன் மனையில் விருந்துண்டதோர் சூழ்ச்சியால்,அவ்வெண்ணங்களை முடித்துக்கொண்டார். கண்ணன் தூதுசெல்வதற்கு இசைந்த நோக்கங்களில் இதுவும் ஒன்றாகும்.

---

வில்லை முறித்தெறிந்தபின் அவைவிட்டு விதுரன் நீங்க,துரியோதனனைப் பார்த்துப் பீஷ்மன்கூறுவான்.

காரனைத் தும்விடு தாரை யன்னபல
கணைக ளேவியமர் கருதும்வில்
வீரனைப்பழு துரைத்தநீ பகையை
எங்ஙனே தனிகொல் வெல்லுவாய்
பாரனைத்துமினி யைவ ராளும்வகை
பண்ணு வித்தனை யழிந்ததுன்
பேரனைத்துமென வுள்ள ழிந்துசில
பேசி னானுயர் பிதாமகன். 63.

பதவுரை.

கார் அனைத்தும் - எல்லாமேகங்களும், விடு - பொழிகின்ற, தாரை அன்ன - மழைத்தாரைபோல, பல - அநேக, கணைகள் - அம்புகளை, ஏவி - தொடுத்து, அமர்கருதும் - யுத்தம்செய்யும், வில் - வில்லையுடைய, வீரனை - வீரனாகிய விதுரனை, பழுது - பழிச்சொற்கள், உரைத்த நீ - சொல்லிய நீ, பகையை - பகைவர்களை, தனிகொல் - தனியாக, எங்ஙனே - எவ்வாறு, வெல்லுவாய் - யுத்தத்தில் ஜெயிப்பாய்;

இனி - இனிமேல், பார் அனைத்தும் - பூமி முழுதும், ஐவர் - பாண்டவர்கள், ஆளும்வகை - ஆளும்படி, பண்ணுவித்தனை - செய்துவிட்டாய்;

உன் - உன்னுடைய, பேர் அனைத்தும் - கீர்த்தி எல்லாம், அழிந்தது - அழிந்துபோயது, என - என்று, உள் - மனம், அழிந்து - உருகி, உயர் - உயரிய குணங்களையுடைய, பிதாமகன் - பாட்டனாகிய பீஷ்மன், சில - சில வார்த்தைகள், பேசினான் - கூறினான்.

---

## இலக்கணம்

G ஏழாம் வேற்றுமை.

இடப்பொருள் தருவது ஏழாம்வேற்றுமை. இவ்விடப்பொருள் தரும்உருபுகளில் உயிரீறாய்வருவன:- கடை இடை தலை திசை புடை பாடு அளை உழை வழி உழி உளி, முதலியன.

வாய் சார் கீழ், என்பன யகர ரகர ழகர மெய்களை ஈற்றிலுடைய ஏழாம் வேற்றுமை உருபுகள்.

I. ஏழாம் வேற்றுமை உருபுகளை ஏற்றிருக்கின்ற நிலைமொழிகளுக்குப்பின் வருகின்ற மொழிமுதல்வல்லினமெய் பெரும்பான்மை மிகுந்தும் சிறுபான்மை மிகாமலும் புணரக் காண்கின்றோம்.

(a) பாடு உளி என்னும் இவ்விரண்டு உருபுகளுக்குப்பின் வல்லினம் மிகுவதில்லை:—

நம்பாடு + கேட்டான் = நம்பாடு கேட்டான்.
காவுளி + சேர் = காவுளிசேர்.

(b) மற்ற உருபுகளுக்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்து புணர்கின்றது என்று கொள்ளலாம்.

கவிகைகீழ் + தங்கும் = கவிகைகீழ்த் தங்கும்.
இல்லிடை + கண்டான் = இல்லிடைக்கண்டான்.

II. ஏழாம்வேற்றுமைத் தொகையில் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது.

நீர் + படிந்தான் = நீர்படிந்தான்.
பாய் + படுத்தான் = பாய்படுத்தான்.
மனை + புகுந்தான் = மனைபுகுந்தான்.

III. ஏழாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

நீர் + பறவை = நீர்ப்பறவை (நீரில் வாழும் பறவை)
தலை + பாகை = தலைப்பாகை (தலையில் வைக்கும்பாகை)
பானை + சோறு = பானைச்சோறு (பானையில் உள்ள [சோறு]
கூண்டு + கிளி = கூண்டுக்கிளி (கூண்டில் உள்ள கிளி)



H. எட்டாம் வேற்றுமை.

மைந்தா, தாயே, அண்ணா, அரசே என்பனபோல் அழைக்கப்படும் பொருளைத் தந்துநிற்கும் சொற்கள் எட்டாம்வேற்றுமையை அடைந்தனவாகும். இதற்கு விளிவேற்றுமை என்ற பெயரும் உண்டு-(விளித்தல்-கூப்பிடுதல்). இவ்விளி, சேய்மைவிளி அண்மைவிளி என இருவகைப்படும். சேய்மைவிளி என்பது, பெரும்பாலும் தூரத்திலிருப்பவர்களைக் கூப்பிடுவதாம். தம்பீ இங்குவா; வேந்தே நீ எங்குளாய்; கடவுளே கருணையில்லையோ; முதலியன சேய்மை விளிக்கு உதாரணங்கள். தம்பி, என்னும் முதல்வேற்றுமைச்சொல், ஈற்று ஈகாரம் நீண்டு விளியாயிற்று; வேந்து கடவுள் என்னும் சொற்கள் ஏகார உருபேற்று விளியாயின.

இனி, 'தம்பி, என் சொற்கேள்,' 'மைந்த அழேல்' 'வேந்து உன் பெருமைகண்டேன்', எனச் சமீபத்தில் இருப்பவரை அழைக்குஞ் சொற்கள் அண்மைவிளி ஆகும்.

I. நிலைமொழி சேய்மைவிளியாய் இருக்குமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

அண்ணா + காண் = அண்ணா காண்.
மகனே + சென்றாயோ = மகனே சென்றாயோ.
தாயே + தருவாய் = தாயே தருவாய்.

II. நிலைமொழியாதும் மாறாது முதல்வேற்றுமை உருவத்திலேயே நின்று அண்மைவிளிப் பொருளுடையதாயின் வருமொழிமுதல் வல்லினமெய் சில போது மிகும்.

பிதா + கேள் = பிதாக்கேள்.
கோ + கூறாய் = கோக் கூறாய்.
மகடூஉ + பாராய் = மகடூஉப்பாராய்.
சே + செல் = சேச்செல்.

குறிப்பு:—இங்கு உள்ள நிலைமொழிகளைப்போல் உயிர்நெடிலில் முடிந்த சொற்கள் விளிப்பொருளில் நிற்கும் பொழுதுதான் வருமொழிமுதல் வல்லினமெய் மிகக் காண்கின்றோம். அவ்வாறின்றி மெய்யெழுத்திலேனும் குற்றெழுத்திலேனும் முடிகின்ற சொற்கள் அண்மைவிளிப் பொருளுடன் நிலைமொழிகளாய் நிற்குங்கால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுவதில்லை.

முனி + காண் = முனி காண்
தாய் + சொல் = தாய் சொல்
மகளிர் + கூறீர் = மகளிர் கூறீர்
வேந்து + தருவாய் = வேந்து தருவாய்

எனினும், 'விள' என்னுஞ்சொல் குற்றுயிர் ஈற்றதாயினும் அது விளிப்பெயராக நிற்குங்கால், "விளக் கொடியை" என வருமொழி முதல் வல்லினமெய் மிகுகின்றது.

இதுவரையில் நிலைமொழி, ஒன்று முதல் எட்டு வரையிலுள்ள வேற்றுமைகளில் யாதானுமொன்றை யடைந்து நிற்கின்ற உயிர் அல்லது யகர ரகர ழகர மெய்களை ஈற்றிலுடைய சொல்லாயிருக்க, வருமொழிமுதல் வல்லினமெய் புணரும் விதிகள்கூறலாயின. மற்றத் தொடர்களுக்குரிய விதிகளை இனிக் கற்போம்.

---

# மதுரைக் கோவை

[317-வது பக்கத் தொடர்ச்சி]

### XXI. உடன்போக்கு

[சுரத்தி]டைக் கொண்டேகல்

களினக் கமழ்கொன்றை யார்கடம் பாடவிக்
கானலிளம்
புளினத் தனமென்னும் பூந்திரு வேநறும்
போதவிழ்தேன்
றுளிநக் கொழுகும் பொழிலிருப் பாலுந்
துயரகற்றி
நளினப் பரிபுரப் பாதங்கள் றும
னடந்தருளே. 276.

தமர் வருவரென் றஞ்சிய தலைவியைத் தேற்றல்

விளையுங் கதிதந்த வெள்ளிமன் றாளர்
வியன்கிரிநாட்
டளையுங் கிளைவண் டலைகுழ லாயென்
னடுசிலைக்கால்
வளையும் பொழுது புறஞ்சாய்வர் கோடி
மறவர்மற்றுன்
கிளையும் பொரினுமஞ் சேனஞ்சு வேனொரு
கேண்மைகொண்டே. 277.

சுரத்திடை நலம் பாராட்டல்

மல்லொன் றிருபுயத் தார்மது ரேசரை
வாழ்த்தலர்போங்
கல்லென்ற பாலைக் கொடுமைகண் டாய்க்கனி
வாயமுது
மெல்லென்ற கொங்கை யிளநீருந் தந்து
விடாய்தணிய
நில்லென் றருளணங் கேயள காடவி
நீழல்தந்தே. 278.

கண்டோர் விருந்து விலக்கல்

மாதையும் பார்திரு மாதையும் பாரிந்த
மாதினடிப்
போதையும் பார்சென்ற போதையும் பார்பொற்
பொருப்பையும்பார்
சூதையும் பாரென் றெழுமுலை யாளன்பர்
சொக்கர்வெற்பில்
யாதையும் பாரண்ண லேயெண்ண மேதெரிந்
தேகுதற்கே. 279.

தலைவன் தலைவிக்கு நகரணிமை கூறல்

குழைக்கா னிடையிடை யேயிரு பாலுங்
குலைவிழும்நெற்
றழைக்கான மித்தனை யுங்கடந் தால்வண்டு
கால்பரப்பித்
தழைக்கா னிசைக்குங் குழலணங் கேசொக்கர்
சந்தனப்பூ
மழைக்கா ரணிபொங் கருந்தமி ழ்நாடு
மதுரையுமே. 280.

தலைவன் தலைவிக்கு நகர் காட்டல்

தேம்பாய் கழனித் திருவால வாயர்
சிலம்பிலினி
நாம்பாலை விட்டு நகர்புகுந் தேமண
நாறுபசசைக்
காம்பாடு தோளியுன் மங்கல நாணுங்
களமுந்தந்த
பூம்பாளை வீசிளம் பூகா டவிநம்
புறநகரே. 281.

பதிவள முரைத்தல்

கொத்தம் புயமலர்க் கோதாயுன் பொன்னடிக்
கொப்புளங்கொ
ளத்தஞ் செலமுன் விதித்தன வாயினு
மாகமத்தின்
சுத்தம் பயில்சொக்கர் கூடலும் வீதியுந்
தோரணமு
முத்தம் படிதிரு வாசலுங் காண
முயன்றனமே. 282.

உடன்போக்கு முற்றும்.

---

## XXII. தாயர் புலம்பல்

சேவிலி தோழியை வினுதல்

நற்று[ய்] மனமுமென் னெஞ்சும்பின் னுக
நடைபயிலும்
பொற்று மரைமங்கை போனதெங் கேபிறைப்
போதணிந்த
வற்று நதிச்சடை யார்மது ரேசர்
வரையில்வளை
விற்று வியநுத லாயென்கொ ளீகொண்ட
வேதனையே. 283.

தோழி யறத்தோடு நிற்றல்

மருளாத கற்பு மரபுமெண் ணுது
மனம்பொருந்தப்
பொருளாசை யையர் புரிதல்கண் டாளன்பு
பூண்டவருக்
கருளாளர் நம்பெரு மாளால வாய
ரணிவரையிற்
சுருளா ரளகத் திருப்பாவை யென்கொல்
துணிந்தனளே. 284.

சேவிலி தலைவி [மேன்மை] நினைந்திரங்கல்

முகைத்தா மரைவிசிக் குங்கதி ரோனை
முழுதுங்கண்டு
திகைத்தாடன் சிறடிக் குந்திகைத் தாணறுந்
தேனெழுகும்
வகைத்தாம நீண்முடி யார்மது ரேசர்
வரைவடவைத்
துகைத்தா ளலைப்பரப் புஞ்சுரம் போன
சுரிகுழலே. 285.

சேவிலி தலைவி பருவம் நினைந்திரங்கல்

துப்பிற் றிகழும் வரிமணற் பாவையைத்
தோழியர்பா
லொப்பிக்க வாவென் றழைத்துநிற் பாள்கொல்
லுலைமுகவாய்க்
கப்பித்த மூவிலை வேற்சொக்க நாதர்
கடம்பவனத்
தெப்பித் தெனவறி யேன்சுரம் போகவு
மெண்ணினளே.

சேவிலி நற்றுயக் குரைத்தல்

முலைவாய் நழுவிற் றழுவியெ யாதழ
மூண்டுநெஞ்சுக்
கலைவாள் முதுக்குறை வேதுசொல் வேன்வெண்
கதிர்பரப்பும்
மலைவாணர் மாறர் மதுரா புரிநம்மை
வாழநின்று
குலைவா யெனவீ டருந்ததி நாணக்
குறித்தனளே. 287.

நற்றுய் புலம்பல்

துஞ்சுந் துயிலொழிந் தன்னையெங் கேயென்று
சொல்லிநினைந்
தஞ்சுஞ் சிலகிளிக் கேதுசொல் வேனரும்
பும்பிறையு
மஞ்சுந் தவழு மதில்மது ரேசர்
வரையமுது
நஞ்சுந் தருவயற் கண்ணிவெம் பாலை
நடந்தனையே. 288.

சேவிலி கற்புநிலை கூறித் தேற்றல்

சுழிக்கும் புனலி லெடுத்தளித் தாளொரு
தோன்றல்கைம்மா
றளிக்கும் புதுநினை வுக்கரு கான
தருந்தமிழைக்
கொழிக்குந் திருநதி யார்கூடல் மாதுங்கள்
கொள்கையெல்லா
மொழிக்கும் பரிசல்ல வோவல்லி போக
வொருப்பட்டதே. 289.

நற்றுய் மழை முகிற் பரவல்

புயல்கா ளுமக்குப் பெருமையுண் டாகிலும்
பூங்குழல்கண்
டயல்கால்வ துங்க ளறிவல்ல வேயய
ளுரைத்தொண்டர்
செயல்காணுங் கூடற் றிருவால வாயர்
சிலம்பிற்சென்று
கயல்காயுங் கண்களி னக்கிடுவீர் நிழற்
காவணமே. 290.

நற்றுய் புட் பரவல்

மண்பா வியசடை யார்மது ராபுரி
வள்ளலுமென்
பெண்பாவி யும்வர நீகரைந் தாலுனைப்
பேணியுண
வுண்பா யெனமேம் பலிதரு வேன்பின்னை
யுன்னிரண்டு
கண்பார்வை யும்பெறு வாய்கிளை பேணுங்
கருங்கொடியே. 291.

நற்றுய் வேதியரை நிமித்தம் வினுதல்

ஆலைத் தடவயல் சூழால வாய
ரடிதொழுமுக்
காலைக் கடனறி யந்தணர் காள்மை
கலந்தகன்ற



வேலைத் தடங்கண்ணி யுஞ்சிலைக் காளையு
மீளவந்து
மாலைப் புதுமணஞ் செய்வதுண் டோவென்
வளமனைக்கே. 292.

நாடத் துணிதல்

வடித்தே வடிவு தடங்கணல் லாயுன்
மயிலையொரு
நொடிக்கே தருவ னினிவருந் தேலுமை
நோற்றுப்பெற்ற
கொடிக்கே யிணங்கும் புயபூத ரர்சொக்கர்
தூண்டும்விடை
யடிக்கே யமைந்ததன் றேரகட லாடை
யகலிடமே. 293.

தாயர் புலம்பல் முற்றும்

---

# ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

## IV. ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரங்கள்.

[316-வது பக்கத் தொடர்ச்சி]

2. இராகம்—தோடி.] [தாளம்—ஆதி.

பல்லவி

கடதேரராதா மநஸா..............................................(கடதேரராதா)

அநுபல்லவி

எடலேக பஜந ஜேஸிநீ—யெடகல்கு நிஜமு தப்பரல தெலிஸி....(கடதேரராதா)

சரணம்

கலசித்த லௌகிக மநுச்ருங்—கலமந்து தகலயே யுலூ
கலபத்துநிகி நிஜதாஸுடை—வெலஸில்லு த்யாக ராஜுமாடவிநி......(கடதேரராதா)

பொருள்

மநஸா - ஓ மனமே, கடதேர ராதா - கடைத்தேறக் கூடாதா ?

நீயெட கல்கு - உன்னிடத்திலிருக்கிற, நிஜமு தப்பர லநு- ஸத்யா ஸத்யங்களை, தெலிஸி- உணர்ந்துகொண்டு, எடலேக - இடைவிடாமல், பஜனஜேஸி-பஜனை பண்ணி (கடதோராதா - கடைத்தேறக் கூடாதா?)

கலசித்த லௌகிகமுஅநு ச்ருங்கல மந்து - துன்மார்க் கர்களின் நடவடிக்கைகளென்னும் சங்கிலியில், தகலயே - கட்டுப்பட்டு விடாமலேயே, உலூகல பத்துநிகி - உரலிற் கட்டுப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மனுக்கு, நிஜ தாஸுடை - உண்மையான பக்தனய், வெலஸில்லு த்யாகராஜு - விளங்கும் தியாகராஜனுடைய, மாட-நன் மொழியை, விநி - கேட்டு, (கடதேரராதா - கடைத்தேறக் கூடாதா?)

தோடி ராகலக்ஷணம்

ஸ்ரீ ரங்கநாதனைப் பற்றிய ஸ்தோத்திரமான "ராஜு வெடலே" என்ற கீர்த்தனத்தின் குறிப்பில் தோடி ராக லக்ஷணத்தைப் பற்றிக் காண்க. (173-வது பக்கம்)

### ஸ்வர ஸாஹித்யம்

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.

; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.

| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.

|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.

* — . இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.

ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.

பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

குறிப்பு:—இக்கீர்த்தனம் மத்யம காலத்திற் பாடப்படவேண்டும்.

பல்லவி

| | | | |
|---|---|---|---|
| ; ; ; * ஸா நீ - கா ; - ரீ | கா ; ; - ரீ | ; - ரீ ரீ ; - | \|\| |
| , ; ; * க ட - தே; - ர | ரா ; ; - தா | ; ம - ந ; - | \|\| |
| ஸா ; ; * ஸா நீ கா; ரீ | கா ; ; - ரீ | ; - ரீ ரீ ; | \|\| |
| ஸா ; ; * க ட தே; ர | ரா ; ; - தா | , — ம ந ; | \|\| |
| ஸரிகரிரிஸ * ஸா நீ கா; ரீ | கா மா; - ம க | கா - ரீ ரீ; | \|\| |
| ஸா. . . . . * க ட தே; ர | ரா . ; - தா . | . - ம ந; | \|\| |
| ஸரிகரிரிஸ * ஸா ரீ கா; மா | பா ; ; - கா | ; - மா பா; | \|\| |
| ஸா. . . . . * க ட தே; ர | ரா ; ; - தா | ; - ம ந ; | \|\| |
| ம க ரீ ஸா * ஸா ரீ கா; மா | தா ; ; - த நி | ஸ்ா - ஸ்நிதாபா | \|\| |
| ஸா. . . * க டதே; ர | ரா ; ; - தா . | . - ம . . ந | \|\| |
| தபமகரிஸ * ஸா ரீ கா; மா | பதநீதா - த நி | ஸ்ரி - ஸ்நிதாபா | \|\| |
| ஸா. . . . . * க ட தே, ர | ரா . . . - தா . | . . - ம . . ந | \|\| |
| தபமகரிஸ * ஸா ரீ கா; மா | பதநீதா - தநி | ஸ்ரி - க்ரிஸ்நிதப | \|\| |
| ஸா. . . . . * க ட தே; ர | ரா . . . - தா | . . - ம . . . ந . | \|\| |

| | | | |
|---|---|---|---|
| தபமகரிஸ * ஸா ரீ கா; மா | பதநீதா - த நி | ஸ்ரி - க்ம்க்ரிஸ்நி | ‖ |
| ஸா. . . . . * க ட தே; ர | ரா . . . - தா . | . . - ம . . . ந . | ‖ |
| தபமகரிஸ * | | | |
| ஸா . . . . * (கடதேராதா) | | | |

அநுபல்லவி

| | | | |
|---|---|---|---|
| ; ; ; * தா பா கா; மா | தா தா; - தா | நீ ஸ்ா ; நீ | ‖ |
| ; ; ; * எ ட லே: க | ப ஜ; - ந | . ஜே ; வி | ‖ |
| ஸ்ா ; ; * தா பா கா; மா | பதநீ ; - த நி | ஸ்ா - தநிஸ்ா - நீ | ‖ |
| . ; ; * எ ட லே; க | ப.ஜ; - ந . | . -ஜே. . - வி | ‖ |
| ஸ்ா ; ; * ஸ்நிதப - கா; மா | பதநீ; - த நி | ஸ்ா - தநிஸா - நீ | ‖ |
| . ; ; * எ.ட. - லே; க | ப.ஜ; - ந . | . - ஜே. . - வி | ‖ |
| தாநீஸ்ாரீஸ்நீதா * நிதபமகா; மா | ப த நீ; - த நி | ஸ்ா - தநிஸ்ா - நீ | ‖ |
| . . . . . . . . * எ.ட .லே; க | ப . ஜ; - ந . | . - ஜே. . - வி | ‖ |
| ஸ்ரிக்ரிரிஸ் * ஸ்ரிக்ா க்ரிரீஸ்ா | ரிஸ்ஸ்நிநித - ஸ் நி | நிதத்பபப - த ப | ‖ |
| நீ . . . . . * யெ.ட -கல் . கு | நி . ஜ . மு. - த ப் | ப . ர . ல. - தெ. | ‖ |
| பமமககரி * | | | |
| வி.வி . . * (கடதோராதா) | | | |

சரணம்

| | | | |
|---|---|---|---|
| ; ; ; * தா பா மா கா மா | பா ; ; - மா | கா மா பா; | ‖ |
| , ; ; * க ல சித் . த | லெள ; ; - கி | க ம து ; | ‖ |
| மகரீஸா * ஸ ரி கா - கா ரீ ஸா | நிதநி ஸரிஸ - ஸரி | கா - ரிகமா - க ம | ‖ |
| ச்ரு...ங் * க . ல - மங் . து | த. க . ல . - க . | . - யே. . - யு . | ‖ |
| பா ; , * தா பா கா; மா | ப த நீ ; - த நி | ஸ்ா - தநிஸ்ா - நீ | ‖ |
| லூ ; ; * க ல பத்; து | நி . கி , - நி . | ஜ - தா. . - ஸ¬ | ‖ |
| ஸ்ாஸ்ாஸ்ா * ஸ்நிதப - கா; மா | ப த நீ ; - த நி | ஸ்ா - தநிஸ்ா - நீ | ‖ |
| டையு லூ * க .ல· - பத்; து | நி . கி ; - நி . | ஜ - தா. . - ஸ¬ | ‖ |
| ஸ்ாஸ்ாஸ்ா * ஸ்நிதப - கா; மா | ப த நீ ; - தநி | ஸ்ா - தநிஸ்ா - நீ | ‖ |
| டை யு லூ * க . ல . - பத்; து | நி . கி ; - நி . | ஜ - தா. . - ஸ¬ | ‖ |
| தாநீஸ்ாரீஸ்நீநா * க்ாக்ா-க்ரிரீஸ்ா | ரிஸ்ஸ்நிரி த - ஸ்நி | நிததபபம - த ப | ‖ |
| டை. . . . . . . * வெல-வில்.லு | த்யா. . . க - ரா. | ஜ¬.மா. . - ட . | ‖ |
| பமமககரி * | | | |
| வி.நி . . . * (கடதேராதா) | | | |

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தாகாண்டம்—4. மராமரப் படலம்

[319-வது பக்கத் தொடர்ச்சி]

உயர நவில்வா ரயரவும் வேண்டும்.

சுக்கிரீவனது செய்தியனைத்தும் தெரியும். இச்சுக்கிரீவனுக்குப் பகையாயிருக்கின்ற வாலியின் திறமை அநுமனால் விளம்பப் பெற்றிருக்கின்றது. அவ்வாலிக்குக் கூற்றுவனாய் மிக்க ஆர்வமுடன் ஏவப்படுகின்ற இராமனது ஆற்றலைப்பற்றிப் புதிது ஒன்றும் பேச வேண்டியதில்லை. அவ்வாலியை இவ்விராமன் கொல்வானோ என்ற சோதனைக்கு இலக்காகுமாறு வளர்ந்திருக்கின்ற ஏழுமராமரங்களின் தன்மையை இனிப் பல பாசுரங்களால் புலவர் பேசலுறுகின்றார். "ஐயா, வாலி இவைகளை ஒன்றாகவும் தனித்தனியாகவும் முன் துளைத்திருக்கின்றான். ஆகையால், இராமரும் இம்மரங்களில் ஒன்றை ஒருபாணத்தால் பிளந்தெறிவாராயின், வாலிமாண்டதாக எண்ணுவேன்" என்று சுக்கிரீவனை இயம்பவைக்கும் வகையில் அம்மரங்களின் வன்மை திண்மை அனையவைகளை வான்மீகி முனிவர் விளம்பி முடித்தவராகின்றார். கம்பரோ, இம்மரங்கள் முன்னொரு காலத்தில் வாலியால் எய்யப்பட்டன என்பதொன்றும் இயம்பாமல், அது செய்ய வாலியின் ஆற்றலுந்தான் போதுமோவென்ற திசயிக்கும்படி ஒன்பது பாசுரங்களால் அவைகளின் எய்வதற்கரிய வலிமையைப் பேசுகின்றனர்:—

ஊழி பேரினும் பேர்வில வுலகங்க ளுலைந்து
தாழுங் காலத்துந் தாழ்வில தயங்குபே ரிருள்சூ
ழாழி மாநிலந் தாங்கிய வரும்பெருங் கிரிகள்
ஏழு மாண்டுசென் றொருவழி நின்றெனவியைந்த.

[யுகங்கள் புரண்டாலும் இவை இடம் விட்டுப் பெயராதன; உலகங்கள் குலைந்து விழுந்தாலும் இவை விழாதன. திசைப்பை விளக்கின்ற பெரிய இருள் சூழ்ந்த கடலால் சூழப்பட்ட இப்பெரிய பூமியைத் தாங்குகின்ற அரியபெரிய ஏழு மலைகளும் அவ்விடம் சென்று ஒன்று சேர நின்றனபோலப் பொருந்தியவை]

கலைகொண் டோங்கிய மதியமுங் கதிரவன் றானுந்
தலைகண் டோடுதற் கருந்தவந் தொடங்கிய சாரல்
மலைகண் டோமென் பதல்லது மலர்மிசை யயற்கு
மிலைகண்டோமெனத்தெரிப்பருந்தரத்தனவேழும்.

[அவ்வேழு மரங்களும், கலைகள் கொண்டு வளர்ந்த சந்திரனும் சூரியனும், அவைகளின் உச்சியைக் கண்டு கடப்பதற்கு வேண்டிய அரிய தவத்தைத் தொடங்குதற்கு உரிய சாரலையுடைய ஒரு மலையைக் கண்டுகொண்டோம் என்று சொல்வதற்குத் தகுந்தனவாயிருக்கின்றனவேயல்லாமல், தாமரையின்மீதிருக்கும் பிரமனுக்கும், அவைகளின் இலையைக் கண்டோம் என்று சொல்வதற்கு இயலாத தன்மையுடையன]



ஒக்க நாளெலா முழல்வன வுலைவில வாக
மிக்க தோர்பொரு ளுளதென வேறுகண் டிலமா
றிக்கும் வானமுஞ் செறிந்தவத் தருநிழற் சிதம்
புக்கு நீங்கலிற் றளர்வில விரவிதேர்ப் புரவி.

[நாள்தோறும் ஒரேவிதமாக ஓடி அலைகின்ற சூரியனது தேரில் கட்டியுள்ள குதிரைகள், சோர்வடையாமலிருப்பதற்குச் சிறந்தகாரணம் வேறு உண்டென்று யாம்கண்டதில்லை. திக்குக்களிலும் வானத்திலும் நெருங்கிப் பரந்த அம்மரங்களின் குளிர்ந்த நிழலை அடைந்து செல்வதனால் அக்குதிரைகள் தளர்ச்சியடையாமல் இருக்கின்றன]

நீடு நாள்களுங் கோள்களு மென்னமே னிமிர்ந்து
மாடு தோற்றுவ மலரெனப் பொலிகின்ற வளத்த
ஓடு மாச்சுடர் வெண்மதிக் குட்கறுப் புயர்ந்த
கோடு தேய்த்தலிற் களங்கமுற் றாமெனுங் குறிய

[உயர்ந்த நக்ஷத்திரங்களும் கிரகங்களும் என்று மேலே பொருந்திப் பக்கத்தில் தோன்றுகின்ற அவை, இம்மரங்களின் மலர்கள் என்னும்படி தோன்றுகின்ற வளப்பத்தை உடையன. ஆகாயத்தில் செல்கின்ற சிறந்த ஒளியையுடைய வெண்மையான சந்திரனுக்கு நடுவிலுள்ள மறுவானது, இம்மரங்களின் உயர்ந்த கிளைகள் பட்டு அச்சந்திரன் துஉடம்பைத் தேய்த்தலால் புண்பட்டதினாலேயாமென்று குறிக்கத்தக்கவை]

தீதறும்பெருஞ்சாகைகடழைக்கின்றசெயலால்
வேத மென்னவுந் தருவன விசும்பினு முயர்ந்த
ஆதி யண்டமுன் பயந்தவ னுலகினங் கவனூர்
ஓதிமந்தனிப்பெடையொடும்புடையிருந்துறைவ

[அழிவற்ற பெரிய சாகைகள் (கிளைகள், வேதங்களின் பிரிவுகள்) தழைத்திருக்கின்ற தன்மையால்அம்மரங்கள், வேதங்கள் என்றும் சொல்லத் தகுந்தவை. தேவலோகத்திலும் உயர்ந்திருப்பவை. பழைய அண்டங்களை முன்னே படைத்த பிரமனது உலகத்தில், அவன் வாகனமாக ஏறி நடத்துகின்ற அன்னப்பறவை தன் ஒப்பற்றபெடையுடனே தம் சார்பிருந்து வாசஞ்செய்யத் தக்கவை அம்மரங்கள்]

நாற்ற மல்குபோ தடைகனி காய்முத லனை
வீற்றுமண்டலத்தில்யாவையும்வீழ்கிலயாண்டும்
காற்ற லம்பினுங் கலிநெடு வானிடைக் கலந்த
ஆற்றின் வீழ்ந்துபோ யலைகடற் பாய்தரு மியல்ப

[காற்று அசைத்தாலும், மணம் மிகுந்தமலர்களும்இலைகளும் பழங்களும் காய்களும் முதலிய பலவகைப்பட்ட அனைத்தும் பூலோகத்தில் எங்கும் விழாதனவாகி, ஒலியுடைய பெரிய ஆகாயத்தில் இருக்கின்ற ஆகாயகங்கையில் விழுந்து சென்று அலைகின்ற கடலிற் சேர்கின்ற தன்மையுடையவை]

அடிய நான்மறை யந்தண னண்டத்துக் கப்பான்
முடியின்மேற்சென் றமுடியனவா தலின்முடியா
நெடிய மாலெனு நிலையன நீரிடைக் கிடந்த
படியின் மேனின்ற மேருமால் வரையினும் பெரிய

[அநாதியான நான்கு வேதங்களை யுணர்ந்த பிரம்மன் படைத்த அண்டங்களின் மேல் முகட்டிற்கு அப்பாலும் போயுள்ள நுனியை உடையன. ஆகையால், அளவிடப்படாமல் திருவிக்கிரமாவதாரத்தில் நீண்டுயர்ந்த திருமால் என்று சொல்லத் தக்க நிலைமையுடையவை. நீரின்மேல் இருக்கின்றபூமியில் நிலைபெற்றமகாமேருவைக்காட்டிலும் பருத்தவை]

வள்ள லிந்திரன் மைந்தற்குந் தம்பிக்கும் வயிர்த்த
உள்ளமேயெனவொன் றினொன் றுள்வயிர்ப்புடைய
தெள்ளுநீரிடைக்கிடந்தபார்சுமக்கின்றசேடன்
வெள்ளிவெண்படங்குடைந்துகீழ்போகியவேர

[வள்ளலாகிய இந்திரனது குமாரனான வாலிக்கும் அவனது தம்பியாகிய சுக்கிரீவனுக்கும், ஒருவர்பால் ஒருவர் வன்மம்கொண்ட மனம்போல, ஒன்றைவிட ஒன்று உள்ளே வயிரம் பாய்ந்த தன்மையுடையவை. தெளிந்த கடலின் நடுவில் இருக்கின்ற பூமியைச் சுமக்கின்ற ஆதிசேஷனது வெள்ளிபோன்ற வெண்மையான படத்தைத் துளைத்துக்கொண்டு கீழே ஊன்றிய வேர்களை உடையவை]

சென்று திக்கினை யளந்தன பனைகளிற் றேவர்
என்று நிற்குமென் றிசைப்பன விருசுடர் திரியுங்
குன்றி னுக்குயர்ந் தகன்றன வொன்றினுங் குறுகா
ஒன்றினுக்கொன் றினிடைநெடிதியோசனையுடைய

[போய்த் திக்குக்களை அளவிட்ட இவைகளின் கிளைகளால் சூரியன் தடைபட்டு நின்றுவிடுவான், என்று தேவர்கள் சொல்லத்தக்கவை. சூரிய சந்திரர்கள் சஞ்சரிக்கின்ற உதயகிரி அஸ்தகிரிகளைக் காட்டிலும் உயர்ந்துஅகன்றவை. ஒரு வகையிலும் குறைவில்லாதவை. ஒன்றுக்கொன்று இடையில் அனேக யோசனை தூரம் உள்ளவை]

நன்று;இன்னும் கூறியது கூறமாட்டாமல் கம்பரே சலித்து நின்றுவிட்டார். உயர்வு நவிற்சி உலகவரம்பு இகந்து தோன்றல்வேண்டும் என்பார் ஒரு சாரார். அன்னவரைப் பரிகசித்துத் தெவிட்டும்படி செய்யவோ கம்பர் இன்னபடி ஒன்பது பாசுரங்கள் பாடினார் என்று ஐயுறவேண்டியிருக்கின்றது.வாலி சுக்கிரீவர்களுடைய உள்ளம்போல் வயிர்த்தவை என்ற எதிர்நிலை உவமைத்திறம் ஒழிய இவ்வருணனைகள் ஒன்றிலும் ஆன்றோர்வியப்ப அதிசயந்தோன்றவில்லை. சூரியனும் சந்திரனும், அம்மரங்களின் உச்சியைக் கண்டு கடப்பதற்கு அதன் சாரலிலே தவங்கிடப்பார் ஒருபோது. மறுபோது, கதிரவன் குதிரைகள் அவைகளின் நிழலில் இளைப்பாறிச் செல்லும், மதியத்தின் உடலந் தேய்ந்து மறுப்படும். நான்முகன் அதன் இலை கண்டிலன், அவன் ஊர் ஓதிமம் பெடையுடன் அதன் கிளைகளில் வசிக்கும்.சாகைகள் தழைப்பதால் வேதமென்னவும்அவை, ஒரு ஏழைச் செம்மொழிச் சிலேடை உவமையால், தருகின்றன. சான்றோர்வியப்பவும் உவக்கவும் உயர்வுநவிற்சி உற்றுரைக்கும் ஆற்றல் இல்லாதவரல்லர் கம்பர். அயோத்தியின் பொன் மதில் "உயர்வினோடு உயர்ந்தது" என்று இயம்பிய அவ்வொரு திறமைக்கு ஈடாக வேறொன்று அலங்கார சாத்திரங்க ளத்தனையுந் தேடினாலும் அகப்படலரிது. மற்று, இம்மராமரங்களுக்கு மாத்திரம் கம்பரால் இந்தக் கதி கிடைத்தது ஏன் என்று அயிர்க்கு முன், ஒருகால், அம்மராமரங்களாற்றான் கம்பர்பாசுரங்களுக்கு அந்தக்கதி யெய்தியதோ என்று கேட்கவுந் தகும்.

அலங்காரங்களிலெல்லாம் உத்தம மானதென்று சிறப்பித்துக் கூறப்படும் இவ் வுயர்வுநவிற்சியணியின் இலக்கணம் இவ்வயின் சற்றேஉற்றுநோக்கற் குரியது. தமிழ்த் தண்டியாசிரியர்,

மனப்படு மொருபொருள் வனப்புவந் துரைப்புழி
உலகுவரம் பிறவா நிலைமைத் தாகி
ஆன்றோர் வியப்பத் தோன்றுவ ததிசயம்

எனக் கூறுவார். ஒன்றன் வனப்பினை மகிழ்ந்து உரைக்குங்கால், உலகத்தார் இவ்வளவுதான் மிகைபடச் சொல்லலாம் என அமைத்திருக்கின்ற எல்லையைக் கடவாமல் ஆன்றோர் வியப்பத் தோன்றுவது அதிசயம், என்னும் இவ்விலக்கணத்திற்குக் கம்பர் செய்

யுள்கள் அடங்கவில்லை என்பது வெளிப்படை. உலக வரம்பை இதனினும் அதிகம் கடப்பது அருமை. ஆதலாற்றான், ஆன்றோர், 'என்னே கம்பனும் இது செய்தான்' என்று வியந்தால் உண்டேயன்றி, இப்பாசுரங்களில் நவின்றனவற்றை நயந்து வியப்பவர் ஆகார் திண்ணம். ஒருகால், இராமபிரானேபோல் கம்பரும் இவைகளை மூலப் பொத்தற் செத்தமரங்களென்றே மதித்து, எம்பெருமான் இராமபிரானையே சோதித்தற்கமைந்து நிற்கின்றனவே என வெறுப்பினாலன்றி, அவைகளை உவந்து உரையாமையால் இந்நிலை நேர்ந்திருப்பினும் இருக்கலாம். மற்று, "உலகு வரம்பு இறவா நிலைமைத்து" ஆகவேண்டுமென்பது தமிழ்த் தண்டியின் விதி. இதன் வடமொழி முதனூலாகிய காவ்யாதர்சத்தில் இவ்வணி, "லோகஸீமாதிவர்த்திநீ" என்று, உலகவரம்பு இறந்தே வரவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. அதனைப் பின்பற்றி வழிநூல் தமிழில்வரைந்த தண்டி ஆசிரியர்தம் தந்தையின் பெயர் அம்பிகாபதியென்றும், அந்த அம்பிகாபதியே கம்பர்தம் புத்திரன் ஆகக்கூடும் என்றும் கருதுவார் சில ஆராய்ச்சியாளா. எனின், கம்பர் இவ்வணிக்குரிய வடமொழி இலக்கணத்தையே பின்பற்றினர் என எண்ணநேர்வது இயல்பு. அதன்படி, உலகு வரம்பு இறக்கவேண்டும் என்ற அவ்விதியையும் அதனுடன், அவ்வாறு இறந்து பாடவேண்டிய தன் விதியையும் நினைத்து மனமின்றிப் புனைந்த இப்பாசுரங்கள் இக்கதி யடைந்திருக்கலாம். அல்லது, "உயர்வினோடு உயர்ந்தது பொன்மதில்" என, எண்ணினர் எண்ணத்திற்கும் எட்டாமல் வரம்பு கடந்து மிகைபடக்கூறினும், ஆன்றோர் வியப்ப அதிசயம் தோன்றப் புனைய வல்ல திறமை தன்னையல்லால் பிறர்க் கரிதென்பதை ஒருவாறு ஊகித்த கம்பர், கவிதைத்திறம் குறைந்தோர் கையில், உலகவரம் பிறக்கவேண்டும் என்னும் இலக்கணம் என்ன பாடுபடுத்தும் என்பதை எடுத்துக் காட்டிப் பரிகசிப்பதற்கு உதாரணச் செய்யுள்களாய் இவைகளை உரைத்திருப்பினும் இருக்கலாம். இன்னும், அவ்வெண்ணமொன்றுமின்றி, வரம்பிறக்கவேண்டிய வகையேநாடிக் கம்பர் இவைகளைப்பாட, அவர் பௌத்திரனாகிய தமிழ்த் தண்டியாசிரியர், இம்மரங்களின் பருமனையும் உயரத்தையும் எவ்வளவுதான் மிகைபடக் கூறினாலும், அவற்றை இங்ஙனம் பாடிய புலவன்றன் பழியினும் சிறியவே அவை என மதித்து, தன் பாட்டனார், கல்வியிற் பெரிய கம்பரே இப்படிப் பழிவளர்க்குஞ்செவிலி யாவாராயின் ஏனையோர் என்செய்யார் என அஞ்சி, மற்றவரும் இப்பழிபூணாமல் காக்கும்பொருட்டு, "லோக ஸீமாதிவர்த்திநீ" என்றமுதனூலையே 'உலகு வரம்பிறவாநிலைமைத்தாகி' என அடியுடன் மாற்றத் துணிந்தனர் போலும். கம்பர் பேரன் என்பதுஒருபுறமிருக்க, அம்பிகாபதியின் பிள்ளை அதுவுந்துணிவார், அதற்குமேலும் துணிவார்.

வான்மீகியை இராம பக்தனாக்கிய புண்ணியம்பெற்ற 'மராமர'மே கம்பனுக்கு இப்புலமைப்பழி பூட்டிய தென்னின் இராமனுக்கு இவைகளின்பால் சீற்றம் சிறப்பது வியப்பன்று. தன் சிலையின் நாண் எறிந்தான்; அதுகேட்ட அமரர் கற்பத்தின் இறுதி எய்திவிட்டதென் றயிர்த்துநிற்க, வெய்ய வாளியை ஆளுண்ட வில்லியும் விட்டான்.

ஏழு மாமர முருவிக்கீ ழுலகமென் றிசைக்கு
மேழு மூடுபுக் குருவிப்பின் னுடனடுத் தியன்ற
ஏழி லாமையான் மீண்டதவ் விராகவன் பகழி
ஏழு கண்டபி னுருவுமா லொழிவதன் றின்னும்.

[அந்த இராமபாணம் பெரிய அவ்வேழு மரங்களையும் துளைத்து, கீழுலகம் என்று சொல்லப்படுகின்ற ஏழையும் நடுவே துளைத்துச்சென்று, பின் அப்பால்பொருந்தியிருக்கின்ற ஏழு என்னும் கணக்குடைய பொருள் இல்லாமையால், திரும்பிவந்துவிட்டது. இன்னும், ஏழு என்னும் தொகையையுடைய பொருளைக்காணுமாயின், துளையாமல்விடுவதன்று, துளைத்தே தீரும்.]

ஆகையால்,

ஏழு வேலையு முலகமே லுயர்ந்தன வேழு
மேழு குன்றமு மிருடிக ளெழுவரும் புரவி
யேழு மங்கைய ரெழுவரு நடுங்கின வென்ப
வேழு பெற்றதோ விக்கணைக் கிலக்கமென் றெண்ணி.

[ஏழுகடல்களும், உயர்ந்துள்ள மேல்லோகங்கள் ஏழும், ஸப்த ரிஷிகளும், சூரியனது குதிரைகள் ஏழும், ஸப்தகன்னியரும், இந்த அம்பிற்கு ஏழு என்னுந் தொகையுடையனவெல்லாம் இலக்காகநிற்கின்றனவோ, என்றெண்ணி நடுங்கின.]

என்று, ஏழென்றுஇருந்த எண்ணின் சஞ்சலத்தைக் கம்பர் சமர்த்திக்கின்றார். சந்திராலோகம் என்னும் வடமொழி அலங்காரசாஸ்த்திரத்தின்படி, ரூபகாதிசயோக்தி, ஸாபன்னவாதிசயோக்தி, பேதகாதிசயோக்தி, சம்பந்தாதிசயோக்தி, அக்ரமாதிசயோக்தி, சபலாதிசயோக்தி, அத்யந்தாதிசயோக்தி, என்ன அதிசயோக்தியலங்காரம் ஏழுவகைப்படுமாகையால், அவைகளும், இம்மராமரங்களைத் துளைத்த இராமபாணம் தம்மையுந் துளைக்குமோ என நடுங்கியிருப்பினும் இருக்கலாம், யார் அறிவார்.

உயர்வு நவிற்சியின் உள் நடுக்கம் எவ்வாறாயினும் சுக்கிரீவனது மகிழ்ச்சிக்கோ அளவில்லை. கண்கூடாக் கண்டாலன்றி யாதும் உணருந் தரத்தினன் அல்லன் இவன். தனிப்பரம் பொருளே இவ்விராமன் என்ன அனுமான் முன்னர் எடுத்துச்சொல்லிய நியாயங்களால் ஒன்றும் உணராத இவன், மராமரங்களினூடு இராமபாணம் சென்ற வேகத்தை நோக்கியவுடன்—

"ஓ புருஷோத்தம, நீர் உமதுபாணங்களால் இந்திரன் முன்னிட்ட தேவர்களையும் போரில்அழிக்கவல்லீர். வாலி உமக்கு எம்மாத்திரம்? ஒரே பாணத்தால் ஏழு ஆச்சாமரங்களையும் மலையையும் பூமியையும் ஒருங்கே பிளந்தெறிந்த உமக்கெதிரில் சமரபூமியில் நிற்கவல்லவன் யாவன்? இந்திரனையும் வருணனையும்போல உம்மை நட்பாகப் பெற்று நான் சோகம்நீங்கிக் களிபேருவகை யடைந்தேன். என் நன்மை கருதி என் தமையனை இன்றே சங்கரித்தருள வேண்டும். நான் கைகூப்பி வேண்டுகின்றேன்"

என்று வான்மீகத்திற்போல இராமனது ஆற்றலையும் அது தன் தமையனுக்குக் கூற்றமாகுந் திறத்தினையும் பாராட்டுவதின்றி,

வையநீ வானுநீ மற்றுநீ மலரின்மே
லையனீ யாழிநீ யாழிவா ழமலனீ
செய்யதீ வினைதெறுந் தேவுநீ நாயினே
னுய்யவந் துதவினை யுலகமுந் துதவினாய்

[பூமியும் நீயே, ஆகாயமும் நீயே, தாமரையின் மேலுள்ள பிரம்மனும் நீயே, கடலும் நீ, திருப்பாற்கடலிலுள்ள திருமாலும் நீயே, தீவினைகளை அழிக்கும் செம்மையாகிய தேவனும் நீ, முன் உலகங்களையெல்லாம் உண்டாக்கியநீ, நாய்போன்ற நான் உய்யும்படி வந்து உதவியருளினாய்.]

என்னெனக் கரியதெப் பொருளுமெற் கெளிதலா
லுன்னையித் தலைவிடுத் துதவினார் விதியினார்
அன்னையொப் புடையவுன் னடியருக் கடியன்யான்
மன்னவர்க்கரசவென் றுரைசெய்தான்வசையிலான்

[அரசர்க்குஅரசனே, என் நல்வினை உன்னை இவ்விடத்திற்கு அனுப்பி உதவியது. நான், அன்னைக்கு நிகரான உனது அடியார்களுக்கு அடியவனாவேன். இனி எனக்கு எந்தக் காரியமும் எளியதே யல்லாமல், எனக்கு அரியது யாது உளது; என்று குற்றமற்றவனாகிய சுக்கிரீவன் கூறினான்]

அனுமன் கூறிய நுண்ணிய கரிகளை உணரானேனும், இந்தப் பருத்த சாக்ஷியாலேனும் அவ்வனுமன் உரைத்ததை நம்பினானாதலின் இச்சுக்கிரீவன் வசையற்றவனாயினான். அனுமன் போன்ற சான்றோர் சொன்னவை தெளிதற்குச் சிலபோது வயிர்த்தமரங்களின் உதவியும் வேண்டும்போலும். துன்புளபோது தோன்றும் அன்பும், கண்டவுடன் உளங் கரையும் தன்மையுந் தெரிதலாற்றாச் சுக்கிரீவன் போன்ற நிலையினோர்க்கு அளவற்ற ஆற்றலே தெய்வமெனத் தோன்றும். ஆதலாற்றான் நுண்ணறிவுடைய அனுமன் உடல்வலிச் சோதனையைச் சுக்கிரீவனுக்குஇறுதியாக அமைத்தனன். அவ்வுபாயம் பொய்க்கவில்லை. மராமரங்களைத் துளைத்த வாளியினும் வேகமாய் இனி, இராமனது பரத்துவத்தைப் புகழ்கின்ற வார்த்தைகள் சுக்கிரீவனது வாய்நின்று வருகின்றன. பின் இவ்வாளிக்குத் தானே இலக்காகிய வாலி,

ஏவுகூர் வாளியா லெய்துநா யடியனே
னாவிபோம் வேலைவா யறிவுதந் தருளினாய்
மூவர்நீ முதல்வனீ முற்றுநீ மற்றுநீ
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ

என்று இயம்பிய பாசுரத்தோடு இச் சுக்கிரீவனது பாசுரத்தை அயல்வைத்து நோக்குங்கால், சொற்களும் அவைகளைப் பேசுமுறையும் ஒக்க நின்று, இவ்விருவரும் ஒருவயிற்றுப் பிறப்பாவதுடன், ஒரு சாலைமாணவர்களும் ஆயினரோ வென வினவச்செய்கின்றன.

சுக்கிரீவன் நிலை யிவ்வாறாக, ஏனையோர் மனவெழுச்சியை இயம்பல் மிகை.

ஆடினார் பாடினா ரங்குமிங் குங்கலந்
தோடினா ருவகையின் னறவையுண் டுணர்கிலார்
நேடினும் வாலிகா லனையெனா நெடிதுநாள்
வாடினார் தோளெலாம் வளரமற் றவரெலாம்.

[வாலியின் உபத்திரவத்தால் வாடிய மற்றவர்களெல்லாம், வாலிக்கு ஓர் யமனை இன்றைக்குத் தேடியடையப் பெற்றோம் என்ற களிப்பாகிய கள்ளை உண்டு, தம்மை மறந்தவர்களாய், தம் தோள்கள் பூரிக்க, ஆடினார், பாடினார், அங்கும் இங்கும் கலந்து ஓடினார்.]

மராமரப்படலம் முற்றிற்று.

---

# வர்த்தமானம்

விவாகச் சந்தை:—பிரான்ஸில் ஜனன விகிதம் குறைந்துவிட்டதால் பழையபடி விவாகச் சந்தைகளை உயிர்ப்பித்திருக்கிறார்கள். இந்த முதல் சந்தை ரென்னிஸ் என்னும் நகருக்கு அருகாமையிலுள்ள கிராமத்தில் சமீபத்தில் நடந்தது. மேற்றி ராணியாரும் ஸ்தல அதிகாரிகளும் வந்திருந்து இதற்கு ஆதரவு அளித்தனர். இந்தச் சந்தை காலை நேரத்தில் கூடஆரம்பிக்கும், 12-மணிக்குள் கூட்டம் அதிகரித்துவிடும். இளைஞர்களும் யுவதிகளும் தனித்தனி முகாம்களிலிருந்து பவனி வருவார்கள், நடுப்பகல் முடிந்ததும் கன்னிகள் தங்களுக்குப் பிடித்தவர்களைத் தங்களுடைய செலவிற் பகற் போஜனத்தை உண்ண அழைப்பார்கள். இந்த அழைப்பையவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. ஆனால் அவர்கள் அழைப்பை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அந்தக் கன்னிகளின் விருப்பத்தை அவர்கள் வெறுக்கவில்லை யென்பது அருத்தம். இப்பால்அவர்களுக்குள் விவாகம் நடைபெறா விட்டால் அது அந்தக் கன்னிக்குப் பெரிய ஊனமாகக் கருதப்படும். இவ்விதம் செய்துவிட்ட யுவர்களைக் கிராமத்தார்கள் மதிக்கமாட்டார்கள். பகல் போஜனத்திற்குப் பிறகு மைதானத்தில் தமாஷ்கள் நடைபெறும். பிறகு சதிபதிகள் சேர்ந்து பக்கத்திலுள்ள காடுகளுக்குச் செல்வார்கள். இந்தச் சந்தைக்குப் பிறகு விவாகங்கள் அதிகரித்திருக்கின்றன. ஜன்ன விகிதம் குறைந்துவிட்டதில் கவலைப்பட்டுக்கொண்டிருந்த அதிகாரிகள் இந்தச் சந்தைகளுக்கு விசேஷ ஆதரவு அளித்துவருகின்றார்கள்.

* * *

குட்டிபோட்ட பாம்பு:—பிஹோரிடா என்னுமிடத்தில் உள்ள மியாமி என்னும் ஊரில், ஒரு பாம்பு சமீபத்தில் 10 குட்டிகள் போட்டது. குட்டிகள் பத்தும் உயிருட னிருக்கின்றன. குட்டிகள் பிறந்தவுடன் தாயுடன்ஓடி இரை தேடுகின்றனவாம். பாம்புகள் முட்டையிடும் வழக்கத்திற்கு விரோதமாக இவ்வாறு நடந்ததைக்கண்டு யாவரும் அதிசயமடைகின்றனர்.

* * *

தலை மயிரின் நீளம்:—மனிதர்களின் நிறத்துக்கும், தலையின் அமைப்புக்கும் தக்கபடியாகத் தலைமயிர்களின் எண்ணிக்கை வித்தியாசப்படும். கருமயிர் நிறைந்து அழகுள்ள பெண்களின் தலையில் 1,40,000 முதல் 1,60,000 வரை மயிர்கள் நிறைந்திருக்கக் காணலாம். சிகப்பு மயிர் நிறைந்து உள்ள தலையில் 300,00 முதல் 60,000 வரை யிருக்கின்றனவாம். சராசரி மயிரின் நீளம் 30 அங்குலம் என்று மேனாடுகளில் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு இளம் பருவமுள்ள ஸ்திரீயின் தலையில் உள்ளமயிர்களை ஒன்றன் பின ஒன்றாக வைத்துப் பார்த்தால் சுமார் 75 மைல் தூரத்திற்கு வைக்கத் தகுந்த கூந்தல் இருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றதாம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L.ஸி.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றுமணக்கு எண்ணெ காஸ்ட்ராலகஸ்
ஜவரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்]

M211.N28KN
19917

KALANILAYAM
REG. NO. M. 2324.

எல்லாவிதமான இன்ஷூரன்ஸ்களுக்கும்

ஜூபிட்டர் ஜெனரல்
இன்ஷூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்

யோசனை கேளுங்கள்.

நெருப்பு, கப்பல், மோட்டார், தபால், ரயில்வே இவைகளுக்கும் மரணத்திற்கும் இன்ஷியூரன்ஸ் எடுத்துக்கொள்ளுகிறோம்.

சென்னையிலேயே பாலிஸிகள் கொடுக்கப்பட்டுப் பணங்களும் பட்டுவாடா செய்யப்படும்.

1919-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டுச் சென்னையில் 1920-ம் வருஷம் முதல் வேலைசெய்து வருகிறது. பெரிய பாங்கிகளாலும் வியாபார ஸ்தாபனங்களாலும் மதிக்கப்பட்டது.

பூராவும் நம்பகமானது
(பெரிய முதலும் நிதியும் உடையது)

நேரிலாவது அல்லது நெ. 2547-க்கு போனிலாவது பேசவும்.

நாராயணதாஸ் கிர்தார் தாஸ்
(ஸ்தல மானேஜர்கள்)
நெ. 99, அரமனைக்காரன் தெரு,
சென்னை.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
*Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
*Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஆு ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

உயர்ந்த ஜாதி
பழமரக் கன்றுகள்
முறைப்படி வளர்க்கப்படுவன

பழமரங்கள் வைத்து வளர்ப்பதால் இலாபம்.

அவை உயர்ந்த ஜாதியாயிருக்கவேண்டும். ஜாதியின் சிறப்பு அவைகளை வளர்க்கும் முறைக்குத் தக்கபடி அமையும். உங்களுக்கு வேண்டிய பழச் செடிகளை தக்க இடத்தில் வாங்கத் தயங்காதீர்கள்.

விலையும் நயம்!

ஜாதியில் உயர்ந்தது! ஒருபோதும் கெடாதது!!

தென்னிந்தியா முழுவதும் பேரெடுத்தது
தேசாயின் பழச்செடி தினுசுகளே.

உங்கள் தோட்டம் தோப்புக்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு முன்பு தேசாயைக் கேட்டுத் தெரிந்து வாங்குவதே நன்மையும் இலாபமும் ஆகும் என்பதைத் தீர்மானமாய் வைத்துக்கொள்ளுங்கள்.

நேரிலாயினும் கடித மூலமாயினும் எது கேட்டாலும் தெரிவிக்கத் தயாராயிருக்கிறார். தேவகோட்டை ராம்நகர் எக்ஸ்டென்ஷனில் பழத் தோட்டங்களும் அலங்கார நந்தவனங்களும் அமைத்துத்தரவும் மேற்பார்வை செய்யவும் ஏற்றுக்கொள்வார்.

D. T. தேசாய்—பழமரம் பூஞ்செடி எக்ஸ்பர்ட்.
தேசாய் அண்டு கோ.,
17, க்ராஸ் ரோட் :: மல்லேச்வரம், பங்களூர்.

DESAI & Co., 17, Cross Road
Malleswaram
BANGALORE

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)